விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 221 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 12 வெள்ளிக்கிழமை (28.07.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## கொக்குத்தொடுவாய் மனித புதைகுழிக்கு நீதிகோரி
# தமிழர் தாயகத்தில் இன்று பூரண ஹர்த்தால்



- வடக்கு, கிழக்கு முற்றாக முடங்கும்.
- ஹர்த்தாலுக்கு பல்வேறு தரப்பினர் ஆதரவு.
- பேருந்து சேவைகளும் இடம்பெறாது.
- மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படலாம்.
- கவனயீர்ப்புப் போராட்டத்துக்கு ஏற்பாடு

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி விவகாரத்துக்கு நீதி கோரியும் சர்வதேச நிபுணத்துவத்தை, கண்காணிப்பை வலியுறுத்தியும் தண்ணிமுறிப்பு குருந்தூர்மலை விவகாரம் உள்ளிட்ட தமிழர் தாயகத்தில் இடம்பெறும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகவும் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 15

## கிணற்றுக்குள் வீழ்ந்த 4 வயது சிறுவன் உயிரிழப்பு
### பரந்தனில் சம்பவம்



(கிளிநொச்சி)

பாதுகாப்பற்ற கிணற்றுக்குள் வீழ்ந்த 4 வயது சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

பரந்தன் காஞ்சிபுரம் பகுதியில் நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. 15

## உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு நிறுவுவதற்கு அரசாங்கம் தீர்மானம்
### வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி



(கொழும்பு)

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு ஒன்றை நிறுவுவதற்கு அரசு தீர்மானித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

குறித்த ஆணைக்குழு நிறுவுதல் தொடர்பாக தொழிற் சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புக்களை தெளிவுபடுத்துவதற்கான கலந்துரையாடல் நேற்று அதிபர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்த ஆணைக் 15

## சிறுநீரக சத்திரசிகிச்சை இடைநிறுத்தப்படும் அபாயம்
### அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

கொழும்பு தேசிய சிறுநீரக வைத்தியசாலை உட்பட நாடு பூராகவும் உள்ள சிறுநீரக வைத்தியசாலைகளில் மருந்துத் தட்டுப்பாடு நிலவி வருவதால் எதிர்வரும் தினங்களில் சிறுநீரக சத்திரசிகிச்சைகள் இடைநிறுத்தப்படும் அபாயம் உள்ளது என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் 16

## 5 முஸ்லிம் அமைப்புகளின் தடைகள் நீக்கப்பட்டன
### வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

5 முஸ்லிம் அமைப்புகளுக்கு தடையை நீக்கி வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பு, பொது ஒழுங்கு மற்றும் சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றின் நலன் கருதி, 11 தீவிரவாத அமைப்புக்களைத் தடை செய்யும் சட்டத்தின் கீழ், 13 ஏப்ரல் 2021 அன்று வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பின் மூலம் 5 முஸ்லிம் அமைப்புக்கள் தடை செய்யப்பட்டிருந்தன.

அவ்வாறு பயங்கரவாதத் தடைச் 15

## நல்லூர் திருவிழாவை முன்னிட்டு ரயில் சேவையை அதிகரிக்குக
### நல்லை ஆதீன குரு முதல்வர் புகையிரத முகாமையாளருக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு தினசரிப் புகைவண்டி சேவையை முன்னெடுக்கவேண்டும் என புகையிரத திணைக்கள பொது முகாமையாளருக்கு நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் கடிதமொன்றை அனுப்பியுள்ளார். 15

## வசந்த முதலிகே நேற்று கைது

(கொழும்பு)

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் ஒருங்கிணைப்பாளர் வசந்த முதலிகே கைது செய்யப்பட்டுள்ளார்.

கறுவாத்தோட்டம் பொலிஸாரால் நேற்று வியாழக்கிழமை கைது செய்யப்பட்டார். 15

## உலக சந்தையில்
## கோதுமை மாவின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

கருங்கடல் வழியாக தானிய போக்குவரத்துக்கு ரஷ்யா அனுமதிக்காததால் உலக சந்தையில் கோதுமை மாவின் விலை 15 சதவீதம் அதிகரித்துள்ளது.

ரஷ்யாவின் இந்த முடிவின் மூலம் எதிர்காலத்தில் உணவு நெருக் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களுக்கான தீர்வு விடயத்தில் தமிழ் கட்சிகள் இடையே முரண்பாடு

## இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற சர்வகட்சி மாநாட்டில், தமிழர்களுக்கான தீர்வு விடயத்தில் தமிழ் அரசியல் கட்சிகளுக்கு இடையில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டதாக இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்துரைக்கும் போதே அவர் இந்த விடயத்தினை குறிப்பிட்டார்.

இது தொடர்பில் மேலும் கருத்துரைத்த அவர்,

தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களுக்கு உண்மையில் என்ன தீர்வு வேண்டும் என்பதில் பொதுவான கருத்தொற்றுமை இல்லை.

பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் ஏனைய தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசியலமைப்பின் 13வது திருத்தம், உள்ளூராட்சி சபைத் தேர்தல் மற்றும் தமிழ் சமூகத்திற்கான அதிகாரப் பகிர்வு தொடர்பில் முரண்பட்ட கருத்துக்களைக் கொண்டிருந்தனர் என்றார். (ம-7)

# எரிவாயு விலையில் மாற்றம் அடுத்த வாரம் இறுதி முடிவு

எரிவாயு விலைகளில் மாற்றம் மேற்கொள்வது தொடர்பில் அடுத்த வாரத்திற்குள் இறுதி முடிவு எடுக்கப்படும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டொ தெரிவித்துள்ளார்.

நாட்டில் உள்ள இரண்டு உள்நாட்டு எரிவாயு நிறுவனங்களும் ஒரே விலையில் எரிவாயுவை விற்பனை செய்வது தொடர்பான தீர்மானம் இதன்போது எடுக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் அமைச்சர் மேலும் குறிப்பிடுகையில்,

நாட்டிற்கான உள்நாட்டு எரிவாயு விநியோகம் நுகர்வோர் உரிமைகளை மீறும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அண்மைக் காலங்களில் வர்த்தக நிறுவனங்கள் பாதிக்கப்பட்டுள்ள போதிலும் தற்போதைய பொருளாதார நெருக்கடியின் போது பெரும்பாலான பொருட்களின் விலைகளை குறிப்பிட்ட நிலையான மட்டத்தில் பராமரிக்க முடிந்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறாயினும், நாட்டிலுள்ள இரண்டு எரிவாயு இறக்குமதி நிறுவனங்களும் தமது விலை திருத்தத்தின் மூலம் நுகர்வோருக்கு பாரிய அநீதி இழைத்துள்ளதாகவும் இரு நிறுவனங்களினதும் உள்நாட்டு எரிவாயுக்கான ஒரே விலைகள் குறித்து எதிர்வரும் வாரத்திற்குள் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என தெரிவித்துள்ளார். (ம-7)

# வடக்கு கராத்தே போட்டி

## சக்குறா சங்கத்தை சேர்ந்தோர் 286 தங்கம் உட்பட 574 பதக்கங்கள் பெற்று சாதனை



இலங்கை கராத்தே தோ சம்மேளனத்தின் ஏற்பாட்டில் வட மாகாணத்திற்கான கராத்தே சுற்றுப் போட்டி கடந்த 22,23 ஆம் திகதிகளில் கிளி. மாவட்ட உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

இப் போட்டியில் சர்வதேச சக்குறா சோட்டோக்கான் I.S.S.K.A கராத்தே சங்கத்தைச் சேர்ந்த யாழ், கிளி, முல்லை, மன்னார் மாவட்டங்களைச்சேர்ந்த வீர வீராங்கனைகள் 286 தங்கம், 161 வெள்ளி, 124 வெண்கல பதக்கங்களைப்பெற்று சாதனை படைத்துள்ளது. இவ் வெற்றியாளர்களை பயிற்றுவித்த பெருமை சிகான் S.விஜயராஜ் மற்றும் கழக ஆசிரியர்களைச் சாரும். (ம-7)

# ஊறணியில் பிரார்த்தனையில் ஈடுபட்டவர் உயிரிழப்பு

## உடற்கூற்று மாதிரி கொழும்புக்கு அனுப்பி வைப்பு

வீட்டில் பூஜை அறையில் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்த வயோதிபர் ஒருவர் மயங்கி விழுந்து மரணம் அடைந்த நிலையில் அவரின் மரணத்திற்கான காரணம் கண்டறியப்படாமையினால் அவரின் உடற்கூற்று மாதிரிகள் இரசாயனப் பகுப்பாய்வுக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஊறணியைச் சேர்ந்த செல்வராசா செல்வமனோகரன் (வயது-67) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்று அதிகாலை 5.30 மணியளவில் வீட்டு பூஜை அறையில் பிரார்த்தனை ஈடுபட்டிருந்த போது மயங்கி சரிந்து விழுந்தார். அவரைப் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்த போது அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியரால், தெரிவிக்கப்பட்டது.

இம்மரணம் தொடர்பில் பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்று பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

உடற் கூற்று பரிசோதனையில் மரணத்துக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில் அவரின் உடற்கூற்று மாதிரிகள் இரசாயணப்பகுப்பாய்விற்காக கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (ம-7)


அதிகம் அதிகமாக சுப பலன்களைத் தரும் பலமிகு

Handahana ராசி சுப பலன்

தற்போது சுப பலன்கள் இரட்டிப்பாகியுள்ளன

5 இலட்சம் முதல் பரிசு

10 இலட்சமானது!

3 இலக்கங்களுக்கு ரூ.2000/-,

2 இலக்கங்கள் மற்றும் இலக்கினத்திற்கு ரூ.500/-,

2 இலக்கங்களுக்கு ரூ.200/-,

1 இலக்கத்துடன் இலக்கினத்திற்கு ரூ.120/-,

1 இலக்கத்திற்கும், இலக்கினத்திற்கும் விசேட இலக்கினம் பொருந்தினாலும் ரூ.40/-



விற்பனையில் மூன்றில் ஒன்றுக்கும் மேற்பட்ட வெற்றி வாய்ப்புகள்

இன்றே NLB ராசி சுப பலன்களை பொருத்தி இலட்சாதிபதி ஆகுங்கள்

NLB தேசிய லொத்தர் சபை

வாழ்வின் கனவிற்கு அதிஷ்டத்தின் ஆசீர்வாதம்

(C-2069)



I.C.T

TAMIL - ENGLISH MEDIUM

Mr. T.SUTHARSHAN

(BIT, HNDIT, HNDE, PGDE, MED)

வளவாளர் - கணினி வளநிலையம் யாழ்ப்பாணம்

A/L 2025 பிரிவு I, பிரிவு II

சனி, ஞாயிறு நடைபெறுகின்றன

பொருளியற் கல்லூரி

யாழ்ப்பாணம் (16545)



வேலைவாய்ப்பு

- வெப்மெசின் இயக்குநர் (அனுபவமுள்ளவர்கள்)
- வெப்மெசின் பயிலுனர்கள் (ஆண்கள் இரவுக்கடமை)

குறிப்பு : சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு

076 097 3121


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புற்றுநோயால் பாதிப்போரின் எண்ணிக்கை அதிகரிப்பு

## தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டு திட்டம் தெரிவிப்பு

(கொழும்பு)

**நாட்டில் புற்றுநோயால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டுத் திட்டம் தெரிவித்துள்ளது.**

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட விசேட மருத்துவர் இஷானி பெர்னாண்டோ அந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

இலங்கையில் மரணத்திற்கு இரண்டாவது முக்கிய காரணியாக புற்றுநோய் உள்ளது.

பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் அறிக்கையின்படி 2019 இல் புற்றுநோயால் 15,599 பேர் உயிரிழந்துள்ளனர்.

2020 இல் 37,649 புதிய நோயாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர். ஆண்களிடையே வாய் புற்றுநோய் மிகவும் பொதுவான புற்றுநோயாகும்.

எனக்குத் தெரிந்தவரை புகையிலை பயன்பாட்டை குறைக்க போதிய திட்டங்கள் இல்லை.

புகையிலைக்கு எதிராக அதிக வேலைத்திட்டங்களையும் எதிர்ப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-5)

# பிரான்ஸ் ஜனாதிபதி இலங்கை விஜயம்



(பாரிஸ்)

பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் இந்த வார இறுதியில் பப்புவா நியூகினியாவில் இருந்து நாடு திரும்பும் போது இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக பிரான்ஸ் ஊடகம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் பிரான்ஸ் ஜனாதிபதி, இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தனது குறுகிய கால பயணத்தின் போது சந்திக்கவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. பிரான்ஸ் ஜனாதிபதி ஒருவர் இலங்கைக்கு மேற்கொள்ளும் முதலாவது விஜயம் இதுவாகும். (நி-5)

# கனடாவில் அமைச்சரான ஹரி ஆனந்த சங்கரி



(ஒட்டாவா)

ரொறன்ரோ பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்த சங்கரி கனேடிய அமைச்சரவையில் சுதேச உறவுகள் அமைச்சராக பதவியேற்றுள்ளார்.

கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ ஏழு அமைச்சர்களை நீக்கிவிட்டு, புதிய அமைச்சர்களை நியமித்தார். அதில் ஒருவராக ஹரி ஆனந்த சங்கரியும் இடம்பிடித்துள்ளார்.

ஹரி ஆனந்த சங்கரி என அழைக்கப்படும் சத்தியசங்கரி ஆனந்தசங்கரி கனேடிய அரசியல்வாதியும் லிபரல் கட்சி உறுப்பினரும், மனித உரிமை வழக்கறிஞரும் ஆவார்.

இலங்கைத்தமிழரான இவர் 2015 ஒக்டோபர் 19 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் லிபரல் கட்சியின் சார்பில் இசுக் கார்பரோ-ரூச் பார்க் தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்று முதற்தடவையாக பாராளுமன்றம் சென்றார்.

இவர் இலங்கையின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவருமான வீ. ஆனந்த சங்கரியின் இரண்டாவது மகன் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)

# நீர்க் கட்டணத்தை அதிகரிக்க நடவடிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் ஒகஸ்ட் மாத முற்பகுதியில் இருந்து நீர் கட்டணம் அதிகரிக்கப்படவுள்ளதாக தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.

குறித்த யோசனை அமைச்சரவையின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக சபையின் பொதுமுகாமையாளர் வசந்தா இலங்கசிங்ஹ குறிப்பிட்டார்.

இந்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டால் ஒகஸ்ட் மாத முற்பகுதியில் இருந்து நீர் கட்டணம் அதிகரிக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

எனினும், நீர் கட்டண அதிகரிப்பு வீதம் தொடர்பில் இதுவரை தீர்மானிக்கப்படவில்லை. (நி-5)

# பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பாக முறையான விசாரணை தேவை

## -சமன் ரத்னப்பிரிய-

(கொழும்பு)

இனப்பிரச்சினையால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பாக முறையான விசாரணைகள் நடத்தப்பட வேண்டிய தேவை நாட்டிற்குள்ளும் சர்வதேச ரீதியிலும் எழுந்துள்ளதாக ஜனாதிபதியின் தொழிற்சங்க விவகாரங்களுக்கான பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய தெரிவித்துள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு தொடர்பில் தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புக்களை தெளிவுபடுத்துவதற்காக ஜனாதிபதி அலுவலகத்தில் நடத்தப்பட்ட கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மூன்று தசாப்த கால யுத்தத்தினால் இன, மத வேறுபாடின்றி அனைவரும் பாரிய சேதங்களை சந்திக்க நேரிட்டது.

இந்த விடயம் தொடர்பில் முறையான விசாரணை நடத்தப்பட வேண்டிய தேவை நாட்டிற்குள்ளும் சர்வதேச ரீதியிலும் எழுந்துள்ளதாக குறிப்பிட்ட அவர், அதற்காக ஸ்தாபிக்கப்பட்ட பல்வேறு ஆணைக்குழுக்கள் முன்வைத்த யோசனைகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

தென்னாபிரிக்கா போன்ற நாடுகளின் பொறிமுறைகளை ஆராய்ந்து இலங்கைக்குப் பொருத்தமான பொறிமுறையை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இதனை வெற்றிகரமாக மேற்கொள்ள முடியாவிட்டால் நாடு மீண்டும் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்படும். எனவே சமூகத்தை தெளிவு படுத்தி இதனைச் செயற்படுத்துவதற்கு ஆதரவைப் பெற வேண்டும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# 20 ஆயிரம் பேரை பொலிஸ் சேவையில் இணைக்க முடிவு

(கொழும்பு)

சுமார் 20,000 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிலான் அலஸ் தெரிவித்துள்ளார்.

உத்தியோகத்தர்களின் பதவி விலகல், ஓய்வு மற்றும் இயலாமை போன்ற காரணங்களால் இவ்வாறான நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அதனைக் கருத்தில் கொண்டு 20000 பொலிஸ் உத்தியோகத்தர்களை புதிதாக இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள நிலையில், எதிர்காலத்தில் ஏனைய அதிகாரிகளின் பற்றாக்குறையும் தீர்க்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார். (நி-5)

# வீதிக்கு வரும் யானைகளுக்கு உணவளித்தால் அபராதம்

(கொழும்பு)

வனப்பகுதியில் வீதி ஓரங்களில் சுற்றித் திரியும் காட்டு யானைகளுக்கு உணவு வழங்குபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என வன விலங்கு பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தாவர பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் குற்றமாகும் என திணைக்களம் தெரிவித்துள்ளது.

வனப்பகுதி வழியாக செல்லும், நெடுஞ்சாலைகளில் செல்லும் வாகனங்கள், வீதி ஓரங்களில் சுற்றித் திரியும் காட்டு யானைகளுக்கு உணவு வழங்குவதால் விலங்குகள் சாலைக்கு வருவது வழக்கம்.

இதனால் அந்த வீதிகளில் பயணிக்கும் வாகனங்களுக்கு இடையூறாக யானைகள் உணவு பெறும் சம்பவங்கள் கடந்த காலங்களில் அடிக்கடி இடம் பெற்று வருகின்றன.

எனவே, வனப்பகுதிகளை கடந்து செல்லும் நெடுஞ்சாலைகளில் பயணிக்கும் போது வன விலங்குகளுக்கு உணவளிப்பதை தவிர்க்குமாறு வன விலங்கு பாதுகாப்பு திணைக்களம் மக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளது. (நி-5)

# மருத்துவமனை உள்ளிட்ட சுகாதார நிறுவனங்களில் 3000 மில்லியன் ரூபா மின்கட்டணம் நிலுவையில்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள மருத்துவமனைகள் உள்ளிட்ட சுகாதார நிறுவனங்களில் 3,000 மில்லியன் ரூபா அளவிலான மின் கட்டணம் நிலுவையிலுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

குறித்த நிலுவைத் தொகையை சுகாதார அமைச்சினூடாக இலங்கை மின்சார சபைக்கு செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாக மின்சார சபையின் பொதுமுகாமையாளர் ரொஹான் செனெவிரத்ன குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், மின் கட்டணங்களை செலுத்தாத எந்தவொரு மருத்துவமனையின் மின் இணைப்பும் துண்டிக்கப்படமாட்டாது என இலங்கை மின்சார சபையின் பொதுமுகாமையாளர் ரொஹான் செனெவிரத்ன குறிப்பிட்டுள்ளார் (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல் - நல்லூர் பிரதேச சபை
## சபை நிதி / அபிவிருத்தி வேலைத்திட்டம் - கட்டம் IV

01. தலைவர் பெறுகைக்குழு நல்லூர் பிரதேச சபை கொக்குவில் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ் குறிப்பிட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு வீதி மற்றும் வடிகால் வேலைகளுக்காக கோருகின்றார்.

02. கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வியின் மூலம் நடாத்தப்படும். ஆயினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 03/2020 (i) ஆம் இலக்க 2021.01.11 ஆம் திகதி 04/2016 (iii) ஆம் இலக்க 2021.02.18 ஆம் திகதி மற்றும் 04/2016 (iv) இலக்க 2023.02.09 ஆம் திகதி பொது நிதிச்சுற்றறிக்கைகளுக்கு அமைவாக வடமாகாணத்தை சார்ந்தவருக்கும் மற்றும் வேண்டப்படும் உரிய தரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.

03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி புனரமைப்பு வேலைகளுக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

04. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிக்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் 'தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில் எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் - 021-222-2700, 021-3142841) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணமொன்றை தலைவர் பெறுகைக்குழு நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில் என்னும் முகவரியில் 2023.07.28 திகதியிலிருந்து 2023.08.11 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 தொடக்கம் பி.ப 15.00 வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 3,000.00 (வரி நீங்கலாக) பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில் என்னும் முகவரிக்கு 2023.08.14 ம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும் பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08. கேள்வி பிணை வைப்புத் தொகையினை கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அனுமதிக்கப்பட்ட வங்கியில் செலுத்தி அதன் உண்மைப் பிரதியினை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

09. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் 2023.08.07 ஆம் திகதி நல்லூர் பிரதேச சபை கலாச்சார மண்டபத்தில் மு. ப. 10.00 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்திற்கு ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் கலந்து கொள்ள முடியும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம், ஒப்பந்த இலக்கம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விப்பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 1. | NPS/CF-IV/2023/WD - 01&03/01 | வட்டார ரீதியான வீதி புனரமைப்பு வேலைகள் – வட்டாரம் 01 & 03 (குமரகோட்டம் உப ஒழுங்கை, கோண்டாவில் இருபாலை வீதி உப ஒழுங்கை) | 1.279 | 60 நாட்கள் | C9 / C8 | 49 நாட்கள் | 19,200.00 | 2023.10.29 |
| 2. | NPS/CF-IV/2023/WD – 07/02 | வட்டார ரீதியான வீதி புனரமைப்பு வேலைகள் – வட்டாரம் 07 (ஆடியபாதம் இடப்பக்க 3ம் ஒழுங்கை, மயான வீதி (பல்கலைக்கழக மைதான வீதி) காளிகோவில் உப ஒழுங்கை ) | 2.838 | 90 நாட்கள் | C9/ C8/C7 | 63 நாட்கள் | 42,600.00 | 2023.11.12 |
| 3. | NPS/CF-IV/2023/WD - 08/03 | வட்டார ரீதியான வீதி புனரமைப்பு வேலைகள் – வட்டாரம் 08 ( கலாசாலை வடக்கு 2ம் ஒழுங்கை, முத்துத்தம்பி முன் 2ம் ஒழுங்கை, பலாலிவீதி 2ம் ஒழுங்கை ) | 2.908 | 90 நாட்கள் | C9/ C8/C7 | 63 நாட்கள் | 43,700.00 | 2023.11.12 |
| 4. | NPS/CF-IV/2023/ANN/04 | அன்னை வேளாங்கண்ணி தோட்ட வீதிகள் புனரமைப்பு - அரியாலை | 5.403 | 90 நாட்கள் | C8/ C7/C6 | 77 நாட்கள் | 81,100.00 | 2023.11.26 |
| 5. | NPS/CF-II/2023/KM/05 | காரைமுனங்கு மயான வீதி புனரமைப்பு - அரியாலை | 3.439 | 90 நாட்கள் | C9/ C8/C7 | 63 நாட்கள் | 51,600.00 | 2023.11.12 |
| 6. | NPS/CF-IV/2023/MT/06 | மணியந்தோட்டம் பிரதான வீதி புனரமைப்பு | 17.299 | 90 நாட்கள் | C7/ C6/C5 | 77 நாட்கள் | 259,500.00 | 2023.11.26 |
| 7. | NPS/CF-II/2023/RT/07 | மீள் தாரிடல் வேலைகள் - வட்டாரம் 02,03,05,06 (முத்தட்டு மடம் 2ம் ஒழுங்கை, குமரகோட்டம் ஒழுங்கை, குளம்கரை வீதி, அடைக்கலநாயகி ஒழுங்கை, பிரம்படி வீதி ) | 2.384 | 90 நாட்கள் | C9/ C8/C7 | 63 நாட்கள் | 35,800.00 | 2023.11.12 |

**தலைவர் பெறுகைக்குழு**
**நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்.**

(C-6971)

ரி20 போட்டியில் 7 விக்கெட்டுக்கள்

# மலேசிய வீரர் ஐத்ருஸ் சாதனை




கோலாலம்பூரில் நடைபெற்ற இருபது - 20 உலகக் கிண்ண ஆசிய "பி" தொகுதிக்கான தகுதிகாண் போட்டி ஒன்றில் மலேசிய வீரர் சியாஸ்ருள் ஐத்ருஸ் 7 விக்கெட் குவியலை பதிவு செய்து உலக சாதனை படைத்தார்.

இதன்மூலம் சர்வதேச இருபது-20 கிரிக்கெட் போட்டிகளில் 7 விக்கெட்டுகளை வீழ்த்திய முதலாவது வீரர் என்ற பெருமையை ஐத்ருஸ் தனதாக்கிக் கொண் டார்.

சீனாவுக்கு எதிராக நடைபெற்ற இருபது-20 உலகக் கிண்ண ஆசிய "பி" தொகுதிக்கான தகுதிகாண் போட்டியில் ஒரு ஓட்டமற்ற ஓவர் உட்பட 4 ஓவர்கள் பந்து வீசி 8 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுகளை வீழ்த்தி இந்த சாதனையை சியாஸ்ருள் ஐத்ருஸ் நிலை நாட்டினார்.

சகல வகையான இருபது-20 கிரிக்கெட் போட்டிகளில் பதிவான அதிசிறந்த பந்து வீச்சு பெறுதி இதுவாகும்.

கோலாலம்பூரில் நேற்று முன்தினம் புதன் கிழமை (26) நடைபெற்ற போட்டி யில் முதலில் துடுப்பெடுத் தாட தீர்மானித்த சீனா 4 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 12 ஓட்டங்களை பெற்றிருந்தது.

மூன்றாவது பந்து வீச்சாளராக 3ஆவது ஓவரில் அறிமுகமான ஐத்ருஸ், தனது 2ஆவது ஓவரின் முதல் பந்தில் விக்கெட் ஒன்றை கைப்பற்றியதுடன் அந்த ஓவரில் மேலும் 3 விக்கெட்டுகளை சாய்த்தார்.

தனது 3ஆவது ஓவரில் மேலும் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றி 5 விக்கெட் குவியலைப் பதிவுசெய்த ஐத்ருஸ், கடைசி ஓவரில் ஓட்டம் எதுவும் கொடுக்காமல் மேலும் 2 விக்கெட்களைக் கைப்பற்றினார். அவர் 7 விக்கெட்களையும் போல்ட் முறையில் வீழ்த்தியது சிறப்பம்சமாகும்.

ஐத்ருஸின் புயல்வேக பந்துவீச்சில் சிக்கிய சீனா அணி 11.2 ஓவர்களில் வெறும் 23 ஓட்டங்களை மாத்திரம் எடுத்தது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மலேசியா 4.5 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்து 24 ஓட்டங்களைப் பெற்று வெற்றி யீட்டியது.

# மக்ஸ்வெல்லின் மனைவிக்கு வளைகாப்பு விழா



அவுஸ்திரேலியாவின் பிரபல கிரிக்கெட் வீரரான கிளென் மக்ஸ்வெல்லின் மனைவிக்கு தமிழ் முறைப்படி வளைகாப்பு விழா செய்தமை தற்போது வைரலாக பேசப்பட்டு வருகிறது.

பிரபல அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் கிளென் மக்ஸ்வெல். தமிழ்ப் பெண் வினி ராமனை காதலித்து கடந்த ஆண்டு திருமணம் செய்து கொண்டார்.

கர்ப்பமடைந்த அவருக்கு தமிழ் முறைப்படி வளைகாப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்று அதன் புகைப்படம் சமூகவலைத் தளங்களில் வைரலாகி வருகிறது.

மேக்ஸ்வெல் 2015 உலகக் கிண்ணம் மற்றும் 2021 ஐ.சி.சி. இருபது-20 உலகக் கிண்ணத்தை வென்ற அவுஸ்திரேலிய அணியில் இடம்பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதியை முறைகேடாக பயன்படுத்தியதாக தெரிவித்து இலங்கை கிரிக்கெட் நிறுவனத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்கு முன்னால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நிதியை முறைகேடாகப் பயன் படுத் தியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டிற்கு எதிராக ஒரு சிறிய குழுவினர் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த ஆண்டு அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற இருபதுக்கு - 20 உலகக் கிண்ணப் போட்டியின் போது இலங்கை கிரிக்கெட் நிறுவனம் நிதியை முறைகேடாகப் பயன்படுத்தியதாக குற்றச்சாட்டு வெளியாகியுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே நிதி முறைகேடுகளுக்கு எதிராக குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# தொடர் வீழ்ச்சியை சந்தித்துள்ள இலங்கை ரூபா

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்று மேலும் கடுமையான வீழ்ச்சியை சந்தித்துள்ளது.

இந்தநிலையில், இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின்படி, அமெரிக்க டொலரின் விற்பனை விலை 335.89 ரூபாவாகவும், கொள்வனவு விலை 322.84 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

மேலும், கனேடிய டொலரின் விற்பனை விலை 256.14 ரூபாவாகவும், கொள்வனவு விலை 243.55 ரூபாவாகவும் யூரோ ஒன்றின் விற்பனை பெறுமதி 374.17 ரூபாவாகவும் கொள்வனவு பெறுமதி 357.10 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது. அதேசமயம், ஸ்டெர்லிங் பவுண்டின் விற்பனை பெறுமதி 436.25 ரூபாவாகவும், கொள்வனவு பெறுமதி 417.90 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது. மேலும், பல வெளிநாட்டு நாணயங்களுக்கு எதிராக ரூபாவின் பெறுமதி கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது. (நி)


40 23 ஆவது நினைவஞ்சலி



மலர்வு- 16.03.1938 உதிர்வு-28.07.1983

தங்கராசா-ஜெயமணி

(அமரர்.க.வே.செல்வஜோதி அவர்களின் ஏக புத்திரி)



மலர்வு- 1932 உதிர்வு-10.08.2000

கந்தையா-தங்கராசா

(நீர்பம்பி-பொறிவலர்)

ஐயிரண்டு திங்களாய் அங்கமெல்லாம் நொந்து பெற்றுப்
பையல் என்ற போதே பரிந்து எடுத்துச் செய்ய இரு
கைப்புறத்தில் ஏந்திக் "கனகமுலை" தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி! (பட்டினத்தடிகள்)

அம்பாளின் ருதுசோபன மாதமாம் ஆடி புண்ணிய அமாவாசை அன்று!
"தாய்வயிறு தழும்பு பார்த்து தந்தையின் பரிவு கண்டு "
எம் அன்னையாம் "சாந்தா" எனும் "மானத்தி" யான
"உத்தமி" க்கு தீ மூட்டினேனே "சிறுவனாக" அன்று!

உன் தினத்தில் உன்னவரின் திதி அமைந்ததே இன்று! (வளர்பிறை ஏகாதசி) (6538)

"சாந்த இல்லம்",
இல.210/2/1 யாழ்வீதி,
நெல்லியடி, கரவெட்டி.

"உத்தம" புத்திரன்.
(அமரர்.திருஞானசோதியாம்
"ஞானத்தின்" நினைவுடன்).


# பிரிவினைவாதிகளின் நிலைப்பாடு இன்னமும் மாறவில்லை

ரஞ்சித் பண்டார

(கொழும்பு)

நாட்டில் பிரிவினை வேண்டும் என்று கோரும் தரப்புக்களின் நிலைப்பாடு இன்னமும் மாறவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் பண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"13 ஐ முழுமையாக நடைமுறைப்படுத்த தற்போது முயற்சிக்கப்படுகிறது. ஏன், இதனை இவ்வளவு அவசரமாக செய்ய வேண்டும்?

சர்வகட்சி மாநாட்டின் போது, ஜனாதிபதியோ தனக்கு மக்கள் ஆணை கிடையாது என்றும் இதனால்தான் அனைத்துக் கட்சிகளையும் அழைத்து பேச்சு நடத்துவதாகவும் கூறியிருந்தார்.

இது சிறந்த நிலைப்பாடுதான். ஆனால், இது தொடர்பாக நாம் அவதானத்துடன் இருக்க வேண்டும்.

பேச்சுவார்த்தைக்கு வரும் சில கட்சிகள், இந்நாட்டின் சாதாரண பொது மக்களை பிரதிநிதித்துவப்படுத்துவ தில்லை.

அன்றிலிருந்து நாட்டில் பிரிவினை வேண்டும் என்று கோரும் தரப்புக்கள் தான் இவைகள்.

அவர்களின் நிலைப்பாடு இன்னமும் மாறவில்லை. அதுபோன்றவர்கள் தங்களின் நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ள வேண்டும்.

யாரேனும் ஒரு தரப்பை சந்தோஷப்படுத்தவோ, நாட்டில் மீண்டும் ஒரு பிரிவினைவாதத்தை ஏற்படுத்தவோ நாம் கட்சி என்ற ரீதியில் இணங்கப் போவதில்லை" என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி)


# இராசிபலன்

28.07.2023
ஆடி 12,வெள்ளிக்கிழமை
தசமி முற்பகல்10.20 மணிவரை

அனுசம் முன்னிரவு 9.32 மணிவரை
சுபநேரம்-6.02-7.32 மணிவரை
இராகுகாலம்-10.32-12.02மணிவரை


சந்திராஷ்டமம்-
பரணி,கார்த்திகை.

வளவன்



மேஷம்

வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், மனதில் இனம்புரியா கவலைகள் தோன்றி மறையும், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.




கடகம்

அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், உடல் நலன் சீராகும், மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள்.




துலாம்

உங்களின் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம்.




மகரம்

இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம்.




ரிஷபம்

சுற்றத்தவர் வரவால் சுகம் கூடும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, காரிய அனுகூலமுண்டு, தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், போசன சுகமுண்டு.



சிம்மம்

வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், சிந்தித்துச் செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், போசன சுகமுண்டு.



விருச்சிகம்

குடும்ப உறுப்பினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், விரும்பிய காரியம் விரும்பியபடியே கைகூடும்.



கும்பம்

வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், சுப செய்திகள் வந்து சேரலாம்.



மிதுனம்

ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், வீட்டை பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.



கன்னி

எடுத்த காரியங்களை எளிதில் செய்து முடித்து வெற்றி காண்பீர்கள், குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் அகலும், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.



தனுசு

திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், சுப காரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், பயணத்தால் பலனுண்டு,வழி பாட்டால் மகத்துவம் காணும் நாள்.



மீனம்

தொழில் ரீதியான பயணம் அனுகூலம் தரும்,அன்பால் சாதித்துக் காட்டும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், பயணங்கள் கைகூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சிறு குறை நிறைகால் சேவையை அழிக்கிறது.



குடத்தனை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் நூற்றாண்டு விழா நேற்று வியாழக்கிழமை முற்பகல் இடம் பெற்றது. பாடசாலை அதிபர் எஸ். ஜெயச்சந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம் சார்ள்ஸ் கலந்து கொண்டார். (படம்-மகாலிங்கம்)

## சீன கடலட்டை பண்ணைக்காக
# யாழ்-கிளிநொச்சி மக்களின் ஒற்றுமையை சீர்குலைக்க வேண்டாம்

(அராலி)

**மக்கள் பாரம்பரியமாக தொழில் செய்யும் கடற்பரப்பில் சீன கடல் அட்டைப்பண்ணையை விதைப்பதற்காக யாழ்ப்பாணம்-கிளிநொச்சி மீனவ மக்களின் ஒற்றுமையை சீர்குலைக்கும் செயற்பாட்டில் ஈடுபட வேண்டாம் என முன்னாள் யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சமாசங்களின் தலைவர் அன்னலிங்கம் அன்னராசா வேண்டுகோள் விடுத்தார்.**

நேற்று முன்தினம் புதன் கிழமை பாசையூர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மண்ணித்தலை கடற்பகுதியில் சிறகு வேலைத் தொழிலில் ஈடுபட்ட பாசையூர் மற்றும் குருநகர் சிறகு வலை தொழிலாளர்களின் வலைகளை கிளிநொச்சி நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் எவ்வித முன் அறிவித்தலும் இன்றி பிடுங்கியுள்ளனர்.

150 வருட காலமாக பரம்பரை பரம்பரையாக சிறகு வலைத் தொழிலில் ஈடுபடும் மக்களின் வாழ்வாதாரத்தை கேள்விக்கு உள்ளாக்கும் வகையில் குறித்த அதிகாரிகள் செயற்பட்டமையை வன்மையாக கண்டிக்கிறோம்.

எமது பாரம்பரிய மீனவர்களின் கடற்பரப்புகளை தொழில் முறைகளில் இருந்து அகற்றி சீனாவுக்கு முழுக் கடலையும் தாரைவார்க்கப் போறீர்களா என்ற கேள்வி எழுகிறது.

ஏனெனில் பரம்பரை பரம்பரையாக சிறகுவலை தொழிலில் ஈடுபடும் மீனவர்களின் வாழ்வாதாரத்தை கேள்விக் குள்ளாக்கும் வகையில் கிளிநொச்சி மாவட்ட நீரியல் வளத் திணைக்கள உயர் அதிகாரி நேரடியாக சென்று சிறகு வலைகளை பிடுங்கியுள்ளார் .



சிறகு வேலை தொழிலுக்கு அனுமதி எடுக்க வேண்டுமானால் குறித்த தொழிலாளர்களுக்கு ஏற்கனவே அறிவுறுத்தல் வழங்கி இருக்க வேண்டும்.

அவ்வாறு இல்லாவிட்டால், குறித்த பகுதி மீனவ சங்கங்களுக்கு அல்லது யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்துக்கு அறிவித்திருக்க வேண்டும். குறித்த பகுதியில் முறையற்ற சிறகு வலைகள் இருப்பதால் அதை அகற்றுமாறு கூறி இருக்க வேண்டும்.

கால அவகாசம் வழங்காமல் தான் நினைத்தபடி மக்களின் வாழ்வாதாரத்தை கண்டு கொள்ளாமல் கிளிநொச்சி மாவட்ட நீரியல்வளத் திணைக்களஅதிகாரி செயற்பட்டமையை ஏற்றுக்கொள்ள முடியாது.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மீனவ மக்கள் ஒற்றுமையுடன் வாழ்ந்து வரும் நிலையில் அவர்களுக்கிடையில் விரிசலை ஏற்படுத்தி சீன அட்டைப்பண்ணையை கடலில் விதைப்பதற்கான நடவடிக்கையை குறித்த அதிகாரி மேற்கொள்கிறாரா என்ற சந்தேகம் எழுகிறது.

பிடுங்கப்பட்ட பாசையூர் குருநகர் சிறகு வலை தொழிலாளர்களின் வலைகளை மனிதாபிமான முறையில் அந்த மக்களிடம் திருப்பி வழங்குவதற்கு அதிகாரி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இல்லாவிட்டால் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட மீனவர்கள் இணைந்து எமது மீனவர்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதி தொடர்பில் எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டி ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-104)

## பொலிஸ் நிலையத்தின் பரிசோதனை நிகழ்வுகள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தின் வருடாந்த பரிசோதனை நிகழ்வுகள் நேற்று வியாழக்கிழமை காலை இடம் பெற்றிருந்தன.

சாவகச்சேரிப் பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் உத்தியோகத்தர் பாலித செனவிரட்ன தலைமையில் இடம் பெற்ற மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ.ஏ சனத் நிசாந்த கலந்து கொண்டு பரிசோதனை நிகழ்வுகளை முன்னெடுத்திருந்தார்.

இதன்போது பொலிஸ் உத்தியோகத்தர்களின் அணிவகுப்புப் பரிசோதனை,பொலிஸ் நிலைய வாகனப் பரிசோதனை மற்றும் விசேட வகுப்பு ஆகியனவும் இடம் பெற்றிருந்தன. (நி-5-30-104)

## போதையில் சிலுவையை உடைத்த இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

மதுபோதையில் சிலுவையை உடைத்த குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவர் நேற்று முன்தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் பண்டத்தரிப்பு பற்றிமா தேவாலய வளாகத்தில் இருந்த சிலுவையை மது போதையில் இளைஞன் ஒருவர் உடைத்து சேதப்படுத்தியுள்ளார்.

அது தொடர்பில் இளவாலை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து இளைஞனை கைது செய்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-33)

## ஆசான்களை கௌரவிக்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)


நாவற்குழி மகா வித்தியாலயத்தில் 1982 தொடக்கம் 1992 காலப் பகுதியில் கல்வி கற்ற 92 க.பொ.த. சாதாரண பிரிவைச் சேர்ந்த மாணவர்கள் ஒருங்கிணைத்து நடத்தும் ஆசான்களைப் போற்றி கௌரவிக்கும் நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை நாவற் குழி மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது. (நி-33)

## கலாசாலையின் நூற்றாண்டு நிறைவு தொடர்பான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நூற்றாண்டு விழாவின் நிறைவு வைபவம் எதிர் வரும் ஒக்டோபர் முதலாம் திகதி இடம்பெறவுள்ள நிலையில் இது தொடர்பாக முன்னெடுக்கக் கூடிய விடயங்கள் குறித்துக் கலந்துரையாடுவதற்கு ஆர்வமுள்ள முன்னாள் ஆசிரிய, மாணவர்களை அல்லது கடந்த காலக் கற்கை அணி சார்ந்த பிரதிநிதிகளை எதிர் வரும் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்திற்கு வருகை தருமாறு கலாசாலை அதிபர் அழைப்பு விடுத்துள்ளார். (நி)

## பயன்தரு மரங்கள், பூச்செடிகளுக்கு மண்ணெண்ணெய் ஊற்றிய விஷமிகள்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அச்சுவேலி செல்வநாயகபுரம் வீதியில் உள்ள வளர்மதி சனசமூக நிலைய வளாகத்தில் உள்ள பூச்செடிகள், பயன் தரு மரங்களுக்கு இனந்தெரியாத நபர்கள் மண்ணெண்ணெய் ஊற்றும் ஈனச் செயல் அந்தப் பகுதியில் இருந்த சிசிடிவி கமராவில் பதிவாகியது.

முகங்களை மறைத்துக் கொண்டு பரல் ஒன்றில் மண்ணெண்ணெய் எடுத்து வந்து இந்த கைங்கரியத்தில் ஈடுபட்டனர்.

கமராவில் பதிவாகிய இரண்டு நபர்களும் பிரதேச மக்களினால் அடையாளம் காணப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (நி-5-33-104)



நெல்லியடி மத்திய கல்லூரியின் நூற்றாண்டு விழா நேற்று கோலாகலமாக ஆரம்பமானது. அதிபர் தலைமையில் பழைய மாணவர்கள், புலம்பெயர் பாடசாலை பழைய மாணவர்கள் நடைபவனியில் கலந்து கொண்டனர். (படங்கள்- மகாலிங்கம்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பற்சிகிச்சை மையங்கள் செயலிழப்பு

(கொழும்பு)

பற்சிகிச்சைக்கு தேவையான மருந்துகள் மற்றும் உபகரணங்கள் இன்மையினால், தேசிய பல் மருத்துவமனை உள்ளிட்ட நாட்டின் பற்சிகிச்சை மையங்கள் செயலிழந்து வருவ தாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் பல் மருத்துவ நிபுணர்கள் சங்கம் அறி யப்படுத்தியுள்ளது. பல் மருத்துவ சேவையினை தடையின்றி முன்னெடுத்து செல் வதற்கு இரண்டாயிரம் வகை யான மருந்துகள் அவசியமா கும்.

அவற்றில் 230 வகையான மருந்து பொருட்கள் மற்றும் உபக ரணங்கள் உடனடியாக வழங்க ப்படவில்லை எனில், பல் மருத் துவ சேவையின் வீழ்ச்சியை தடுக்க முடியாது என அந்த சங்கத்தின் செயலாளர் மஞ்சுள ஹேரத் தெரிவித்துள்ளார். (நி -5)


# ஏலவிற்பனை

தும்பளையில் VP நிறுவனத்திடமிருந்து பின்வரும் பொருட்கள் 29.07.2023 சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் ஏலத்தில் விற்கப்படும்.

1. 300 பைப்
2. ஒரு கொய்ஸர்
3. மிக்சர் மெஷின்-1 Bag
4. மரங்கள் (கம்பஸ்)
5. ஸ்கபோல்டிங்
6. ஜெனரேட்டர்

**பார்வையிடும் நேரங்கள்**

புதன்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை
பிற்பகல் 1.00 மணி முதல் மாலை 5 மணி வரை.

**தொடர்புகளுக்கு**

**வி.பிரசாந்த் - 077 298 4941, 077 056 4112**

(C-6962)


# திருவுருவச் சிலை திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

சைவத்திரு. கா. சிவபாலன் திருவுருவச் சிலையின் திறப்பு விழா நாளை சனிக்கிழமை மாலை 3 மணியளவில் மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாலயத்திற்கு அருகாமையில் நா.ஹஜேந்திரன் (அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தென்மராட்சி பிரதேச செயலகம்) தலைமையில் இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி.விக்கினேஸ்வரனும் கௌரவ விருந்தினர்களாக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன், இந்து சமயப் பேரவையின் செயலாளர் ஈசான சிவ.சக்தி கிரிபன், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் அதிபர் ச.லலீசன், இந்து நாகரிகத்துறையின் ஓய்வுநிலைப் பேராசிரியர் திருமதி. நாச்சியார் செல்வநாயகம், தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம், மட்டுவில் வடக்கு கிராம அலுவலர் திருமதி. சோபிகா மதுசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-5)


# சுதேச மருத்துவ திணைக்களம், வடமாகாணம்
## பெறுகைகளுக்கான அழைப்பு
## சமைத்த உணவு வழங்கல் சேவை - 2023/2024

01. வட மாகாண சுதேச மருத்துவ திணைக்கள பெறுகைகள் குழுத்தலைவர், மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் கீழ் இயங்கும் சித்த வைத்தியசாலைகளுக்குத் தேவையான சமைத்த உணவு வழங்கல் சேவைக்கான முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை சேவையாளர்களிடமிருந்து அல்லது நிறுவனத்திடமிருந்து கோருகின்றார்.

| தொ. இல | பெறுகை இல. | சேவை விபரம் | கேள்விப் பிணைப்பணம் | |
|---|---|---|---|---|
| | | | தொகை (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| | NP/22/02/FM09/COOKFOOD/JAF/2023/2024 | சமைத்த உணவு வழங்கல் சேவை - 2023/2024 மாவட்ட சித்த வைத்தியசாலை, யாழ்ப்பாணம். | 15,000.00 | 05.11.2023 |
| | NP/22/02/FM09/COOKFOOD/KIL/2023/2024 | சமைத்த உணவு வழங்கல் சேவை - 2023/2024 மாவட்ட சித்த வைத்தியசாலை, கிளிநொச்சி. | 15,000.00 | 05.11.2023 |
| | NP/22/02/FM09/COOKFOOD/MAN/2023/2024 | சமைத்த உணவு வழங்கல் சேவை - 2023/2024 மாவட்ட சித்த வைத்தியசாலை, மன்னார். | 15,000.00 | 05.11.2023 |
| | NP/22/02/FM09/COOKFOOD/MUL/2023/2024 | சமைத்த உணவு வழங்கல் சேவை-2023/2024 மாவட்ட சித்த வைத்தியசாலை, முல்லைத்தீவு. | 15,000.00 | 05.11.2023 |
| | NP/22/02/FM09/COOKFOOD/PAN/2023/2024 | சமைத்த உணவு வழங்கல் சேவை - 2023/2024 கிராமிய சித்த வைத்தியசாலை, பண்டத்தரிப்பு. | 10,000.00 | 05.11.2023 |
| | NP/22/02/FM09/COOKFOOD/KEE/2023/2024 | சமைத்த உணவு வழங்கல் சேவை - 2023/2024 மத்திய சித்த மருந்தகம், கீரிமலை. | 10,000.00 | 05.11.2023 |
| | NP/22/02/FM09/COOKFOOD/KAR/2023/2024 | சமைத்த உணவு வழங்கல் சேவை - 2023/2024 கிராமிய சித்த வைத்தியசாலை, கரவெட்டி. | 10,000.00 | 05.11.2023 |
| | NP/22/02/FM09/COOKFOOD/KOD/2023/2024 | சமைத்த உணவு வழங்கல் சேவை - 2023/2024 கிராமிய சித்த வைத்தியசாலை, கொடிகாமம். | 10,000.00 | 05.11.2023 |

02. சமைத்த உணவு விநியோகத்திற்கான விலைக்கேள்விதாரர்கள் வலுவான வியாபார பதிவுச்சான்றிதழைக் கொண்டிருக்கின்ற ஒரு தனிநபராகவோ அல்லது தனிப்பட்ட நிறுவனமாகவோ இருத்தல் வேண்டும். மேலும் குறித்த நிறுவனமானது வடமாகாணத்தில் நிறுவனத்தினையோ அல்லது பதிவு செய்யப்பட்ட கிளையினையோ கொண்டிருத்தல் வேண்டும்.

03. தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள சேவையாளர்கள் மேலதிக விபரங்களினையும் விலைக்கேள்விப் பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் கீழ்க்காட்டப்பட்ட முகவரியில் இத்திணைக்களத்திடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். (தொ.பே - 021-222-0824)

04. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இத்திணைக்களத்தில் கிடைக்கும் விண்ணப்பப்படிவத்தினை பூர்த்திசெய்து மேற்காட்டிய ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாக மீளளிக்க முடியாத பெறுகைக் கட்டணம் ரூபா 1000.00 காசாக செலுத்தி தமிழ் மொழியிலான பெறுகைப் பத்திரங்களை அலுவலக நாட்களில் 28.07. 2023 தொடக்கம் 09.08.2023 வரையான காலப்பகுதியில் 09:00 மணி தொடக்கம் 15:00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

05. விலைக்கேள்வித்தாரர்களிற்கான முன் பெறுகைக் கூட்டம் (Pre Bid Meeting) ஆனது 04.08.2023 ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தில் நடைபெறும்.

06. விலைக்கேள்விகள் 10.08.2023 ஆம் திகதி முற்பகல் 10:30 மணிக்கு முன்பதாக பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லது நேரடியாக இத்திணைக்களத்தின் கணக்காளரின் அறையில் உள்ள பெறுகைப் பெட்டியினுள் இடல் வேண்டும். விலைக்கேள்விகள் அனைத்தும் உடனடியாகவே திறக்கப்படும்.

07. "சேவையின் விபரம் ....., பெறுகை இல........" போன்ற விபரம் கடித உறையின் மேல் மூலையில் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரையிடப்படாத, விபரம் குறிப்பிடப்படாத மற்றும் தாமதமான விண்ணப்பங்கள் ஏற்கப்படாமல் திருப்பியனுப்பப்படும்.

08. கிடைக்கப் பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக் கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைகேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

Dr.திருமதி.க.ஜெயநாமகணேசன்,
**தலைவர், மாகாண திணைக்கள பெறுகைகள் குழு,**
**வடமாகாண சுதேச மருத்துவ திணைக்களம்,**
**இல.611, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

**தொலைபேசி : 021-222-0824**
**தொலைநகல் : 021-222-0822**

(தி-6970)


# முட்டை விலை குறையவில்லை

**நுகர்வோர் குற்றச்சாட்டு**

(கொழும்பு)

முட்டை பற்றாக்குறையை நிவர்த்திப்பதற்காக இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகள் சதொச மற்றும் சிறப்பு அங்காடிகளில் நேற்று முந்தினம் முதல் விற்பனை செய்யப்படுகின்றது.

எனினும், நேற்று விலை கொடுத்து முட்டைகளை கொள்வனவு செய்வதற்கு சதொச மற்றும் சிறப்பு அங்காடிகளில் முட்டைகள் இல்லை என நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

மேலும் சாதாரண சந்தைகளில் 65 ரூபாவிற்கு முட்டைகள் விற்பனை செய்யப்படுவதாகவும் நுகர்வோர் குறிப்பிடுகின்றனர்.

நாட்டில் முட்டையின் விலை அதிகரிப்பு மற்றும் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்து சிறப்பு அங்காடிகள் மற்றும் சதொச நிறுவனங்களின் வாயிலாக விற்பனை செய்ய தீர்மானிக்கப்பட்டது.

இதற்கமைய நேற்றுமுதல் 35 ரூபாய் முதல் 40 ரூபாய் வரை விற்பனை செய்யப் பட்டது.

இது தொடர்பாக சதொச தலைவர் தெரிவிக்கையில் 2 இலட்சத்து 38 ஆயிரம் முட்டைகள் சதொசவிற்கு விநியோகிக்கப்பட்ட நிலையில் ஒருநாள் மாத்திரம் 2 இலட்சத்து 10 ஆயிரம் முட்டைகள் விற்பனை செய்யப் பட்டுள்ளது.

சதொச நிறுவனத்திற்கு மேலதிகமாக முட்டைகளை கொள்வனவு செய்ய எதிர் பார்த்துள்ளதாகவும் அதன் வாயிலான நுகர்வோருக்கு தீர்வொன்றினை பெற்றுக் கொடுக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாரதம்



## முகநூல் தரிசனம் 172

### சிறியவர்களிடம் இருந்து பெரியவர்கள் கற்றுக்கொள்ளும் சிறந்த தருணம்

"அம்மா! நான், பாப்பா, உங்க மருமக மூணு பேரும் ஷாப்பிங் மால் போறோம். நீங்க வீட்டை பார்த்துப்பீங்கதானே?"

"சரிப்பா! நான் எங்கே அங்க எல்லாம் வரமுடியும்? வயசாயிடுச்சு இல்ல. கால் வலிவேற படுத்தி எடுக்குது. எனக்கு மாலுக்கு வர்றதுக்குப் பிடிக்காது. நீங்க எல்லாம் போயிட்டு வாங்க"

"ஏன் பிடிக்காது? பாட்டியும் ஷாப்பிங் மாலுக்கு வரணும்" என பேர்த்தி அடம்பிடித்தாள்.

"பாட்டியால அங்க எல்லாம் ஏறி இறங்க முடியாதும்மா. எஸ்கலேட்டர்ல ஏறத் தெரியாது அவங்களுக்கு. அது இல்லாம், அவுங்க பார்த்து சந்தோஷப்படுறதுக்கு அங்கே பெரிசா ஒண்ணுமில்ல. அவுங்களுக்கு கோயிலுக்கு போறதுதான் பிடிக்கும்" என மருமகள் சொன்னாள்.

பாட்டியும், "ஆமாம்" என்று ஆமோதித்தார்.

"பாட்டி வரலைன்னா நானும் மாலுக்கு வரலை"

பத்து வயதுப் பேர்த்தி அடம்பிடித்தாள். பாட்டி விருப்பமில்லை என்று சொன்னாலும் பேர்த்தி கட்டாயப்படுத்திக் கொண்டே இருந்தாள். ஒரே பேர்த்தி தொடர்ந்து அடம்பிடித்ததால் அவள் விருப்பத்துக்கு ஏற்ப பாட்டியும் ஷாப்பிங் மால் வர ஒப்புக் கொண்டார். பேர்த்தி துள்ளிக் குதித்தாள்.

அப்பா அனைவரையும் புறப்படச் சொன்னார். பேர்த்தி சீக்கிரம் உடை உடுத்திக் கொண்டு வந்தாள். பாட்டியும் தயாராய் இருந்தார். அப்பாவும் அம்மாவும் புறப்பட ரெடியாகும் போது பேர்த்தி பாட்டியை அழைத்துக் கொண்டு முன்னறைக்கு வந்தாள். சாக்பீஸால் ஒன்றரை ஜான் அகலத்துக்கு இரண்டு கோடுகள் போட்டாள்.

"பாட்டி... இங்க பாருங்க. இது ஒரு விளையாட்டு. இப்ப நீங்க ஒரு கொக்கு. சரியா? இந்த இரண்டு கோடுகளுக்கும் நடுவுல உங்க வலது காலை வைத்து இடது காலை லேசா மூணு இஞ்ச் தூக்கினா போதும். செய்ங்க!"

"இது எதுக்கும்மா?"

"இதுதான் கொக்கு விளையாட்டு பாட்டி. நானும் செய்யறேன்" என்று செய்து காட்டினாள்.

பாட்டியும் பேர்த்தி கண்டுபிடித்த கொக்கு விளையாட்டை விளையாடிப் பார்த்தார். பையனும் மருமகளும் வர ஷாப்பிங் மாலுக்கு ஆட்டோ பிடித்துப் போனார்கள்.

அங்கே நகரும் படிக்கட்டுகள் நகர்ந்து கொண்டிருந்தன. 'இதில் எப்படி பாட்டி ஏறுவார்' என்று மகனும் மருமகளும் யோசிக்கும் போது பேர்த்தி மட்டும் பாட்டியை நகரும் படிக்கட்டு முன்னால் செல்லமாக இழுத்து வந்தாள்.

"பாட்டி! இதுல பயப்பட எதுவுமில்லை. இப்ப நீங்க கொக்கு விளையாட்டு விளையாடுங்க" என்றாள்.

பாட்டி கைப்பிடியைப் பிடித்துக்கொண்டு, வலது காலை நகரும் படிக்கட்டில் வைத்து இடது காலை மூன்று நான்கு இஞ்ச் மேலே தூக்கினார். மேலே நகர்ந்தார். பின் இடது காலையும் வைத்து இரண்டு காலால் நின்றார். எஸ்கலேட்டரில் அம்மா பூப்போல நகர்வதை மகனும் மருமகளும் பார்த்து வியந்தனர்.

பாட்டி உற்சாகமாகி விட்டார். அடுத்த அடுத்த எஸ்கலேட்டர்களில் மகிழ்ச்சியாகக் குதித்துக் கொண்டே ஏறினார். அதைப் பழகிக் கொள்ளவே பாட்டியும் பேர்த்தியும் கீழே இறங்கி மறுபடி ஏறினார்கள். சினிமா பார்க்கப் போனார்கள். குளிராக இருந்தது. பேர்த்தி தன் பையில் வைத்திருந்த சால்வையை பாட்டிக்குக் கொடுத்தாள்.

"இதை எப்போ கொண்டு வந்தே?" என்று பாட்டி கேட்டதற்கு, "ஓல் டீடெய்ல்ஸ் ஐ நோ பாட்டி" என்றாள் குறும்பாக.

படம் பார்த்த பிறகு உணவகம் சென்றார்கள். "அம்மா, உங்களுக்கு என்ன ஆர்டர் பண்ணட்டும்?" என்றான் மகன். உடனே பேர்த்தி மெனு கார்ட்டைப் பிடுங்கி, "ஏன்? பாட்டிக்கு படிக்கத் தெரியாதா? அவுங்க கிட்ட மெனு கார்ட்டைக் கொடுங்க. பிடிச்சதை அவுங்க ஆர்டர் பண்ணுவாங்க" என்றாள்.

பாட்டி மெனுவைப் பார்த்து ஆர்டர் செய்தார். பேர்த்தியும் பாட்டியும் ஆர்வமாகச் சாப்பிட்டார்கள். பின் மாலில் வீடியோ கேம் விளையாட்டுகளையும் பாட்டியும் பேர்த்தியும் விளையாடினார்கள். வீட்டுக்குக் கிளம்பும் நேரத்தில் பாட்டி வெளியே சென்றார். அப்போது மகளைப் பார்த்து, "என் அம்மாவைப் பத்தி என்னை விட உனக்கு நிறைய தெரிஞ்சிருக்கே செல்லம்" என்று சொல்லி அப்பா சிரித்தார்.

"அப்பா! அதோ பாருங்க... குட்டிப் பாப்பாவை அந்த ஆன்ட்டி கூட்டிட்டு வரும் போது எவ்வளவு ஏற்பாடுகள் செய்துட்டு வர்றாங்க. பால் பாட்டில், துடைக்க துண்டு, டயபர்ஸ் இப்படி எவ்ளோ ஏற்பாடுகள். நீங்க குழந்தையா இருந்தப்போ, பாட்டியும் இப்படித்தான் செய்திருப்பாங்க. அது மாதிரி பாட்டியை வெளிய கூட்டிட்டு போகும் போது பாட்டியைக் கவனிக்க நீங்க அக்கறை எடுங்க. அதை ஏன் செய்றதில்லை?


எல்லோருக்கும் ஷாப்பிங் மால் பார்க்க ஆசையாத்தான் இருக்கும். நீங்களாவே 'வயசானவங்க கோயிலுக்குதான் போவாங்க. ஜாலியா இருக்க மாட்டாங்க'ன்னு நினைச்சிக்காதீங்க. அவுங்க வரலைன்னாலும் மனசுக்குள்ளே ஆசை இருக்கும். நீங்கதான் வற்புறுத்தணும் அப்பா" என்றாள்.

தன் பத்து வயது மகளிடம் புதிதாகக் கற்றுக் கொண்ட மகிழ்ச்சியில் அப்பா நெகிழ்ந்திருந்தார்.



Raagavi Raaga

## ஈக்வடார் சிறையில் கலவரம் 31 கைதிகள் உயிரிழப்பு



(கித்தோ)

தென் அமெரிக்க நாடான ஈக்வடார் சிறையில் ஏற்பட்ட கலவரத்தில் 31 சிறைக் கைதிகள் பலியாகியுள்ளனர்.

ஈக்வடாரின் குவாயாகில் நகரில் மத்திய சிறைச்சாலை அமைந்துள்ளது.

இங்கு சிறைக் கைதிகள் அதிக அளவில் அடைக்கப்பட டுள்ளனர். சமூக விரோத கும்பல் இருதரப்பாக பிரிந்து இருந்து இந்தச் சிறையில் ஆதிக்கம் செலுத்தி வந்துள்ளனர். அது எல்லை மீறி அதிகாரப் போட்டியாக உருமாறி மோதல் வெடித்து கலவரமானது.

கத்தி, கடப்பாரை உள்ளிட்ட கையில் கிடைக்கும் பொருட்களை ஏந்தி ஆக்ரோஷமான முறையில் கைதிகள் இரு குழுக்களாக பிரிந்து சண்டையிட்டுக் கொண்டனர். தகவலறிந்து விரைந்து வந்த இராணுவத்தினர் கண்ணீர் புகை குண்டுகளை வீசியும் தடியடி நடத்தியும் கலவரத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்த கலவரத்தில் 31 சிறை கைதிகள் கொல்லப்பட்டனர். மேலும் பொலிஸார் உட்பட நூற்றுக்கும் அதிகமானோர் படுகாயம் அடைந்துள்ளனர். கலவரத்தைப் பயன்படுத்தி கைதிகள் சிலர் தப்பியோடி உள்ளனர். அவர்களை தேடும் பணியில் பொலிஸார் ஈடுபட்டு வருகிறார்கள். (நி-5)

## திடீரென மூவாய...

### இந்திய ம...

(நெதர்லாந்து)

நெதர்லாந்தில் சர...

எரிந்து சேதம் அடை...

உயிரிழந்துள்ளதாக...

ஜேர்மனியில் இருந்து எகிப்துக்கு பனாமா நாட்டின் சரக்கு கப்பல் 3000 கார்களை ஏற்றிக் கொண்டு சென்றது. நெதர்லாந்து அருகே வடக்கு தட்சு தீவான அமலாஞ்சின் வடக்கே 50 கி.மீ தொலைவில் சரக்குக் கப்பல் திடீரென தீப்பற்றி எரிந்தது.

## கனடாவில் கோர விபத்து மூவர் உயிரிழப்பு

(ஒட்டாவா)

கனடாவில் நியூபிரவுன்ஸ் வீக்கின் ஜெம்செக் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் மூன்று பேர் உயிரிழந்துள்ளனர்.

சில வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டதில் இந்த விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த வாகன விபத்து காரணமாக குறித்த பகுதியின் அதிவேக நெடுஞ்சாலை மூடப்பட்டிருந்தது.

டிராக்டர் ட்ரெய்ல, பாக்ஸ் ட்ரக், மினிவான் மற்றும் பிக்கப் ட்ரக் ஆகிய வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்தில் 55 வயதான பெண் ஒருவரும், 54 வயதான ஆண் ஒருவரும் 32 வயதான ஆண் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

விபத்தில் காயம் அடைந்த ஏனைய இருவரின் நிலைமை ஆபத்தானது என தெரிவிக்கப்படுகிறது.

விபத்துக்கான காரணங்கள் எதுவும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை எனவும் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (நி-5)

## கறையானுக்கு இரையான பாட்டியின் 8700 வெள்ளி



(கோலாலம்பூர்)

மலேசியாவில் பாட்டி ஒருவரின் சேமிப்புப் பணத்தைக் கறையான் அரித்த சம்பவம் சமூக ஊடகங்களில் பகிரப்பட்டு வருகிறது. பணத்தை இழந்த பாட்டிக்கு இணையவாசிகள் ஆறுதல் கூறிவருகின்றனர்.

பாட்டியின் அந்தச் சோகக் கதையைக் கைருல் அஸ்ஸார் எனும் அவரின் பேரன் தமது முகப்புத்தகத்தில் பதிவிட்டார்.

"அடுத்த ஆண்டு ஹஜ் யாத்திரைக்காகப் பாட்டி சேமித்து வைத்திருந்த 30,000 ரிங்கிட்டை (8,700 வெள்ளி) கறையான் அரித்து விட்டதை இப்போது தான் பார்த்தேன்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

காலணிப் பெட்டிக்குள் கறையான் அரித்ததாக நம்பப்படும் கிழிந்த ரிங்கிட்டுகளின் படத்தையும் அவர் பதிவேற்றியிருந்தார்.

அந்தப் பணத்தில் பாதியை மட்டும் தான் காப்பாற்ற முடிந்தது. அதனைத் தாம் மலேசிய மத்திய வங்கியிடம் ஒப்படைத்து விட்டதாகவும் மேலும் பாதி முழுதும் வீணாகி விட்டதாகவும் கைருல் சொன்னார்.

"மக்காவுக்குச் செல்ல எனது பாடடிக்குக் கொடுத்து வைக்கவில்லை என்று நினைக்கிறேன். இந்தச் சம்பவத்தால் வீட்டில் அளவுக்கதிகமான பணத்தை வைக்கக்கூடாது என்று நல்ல பாடம் கிடைத்துவிட்டது" என்று கைருல் வருத்தம் தெரிவித்திருந்தார்.

கைருலின் பாட்டிக்கு நேர்ந்த சம்பவத்துக்குத் தாங்களும் வருந்துவதாக இணையவாசிகளில் பலர் கூறியிருந்தனர். கறையான் போன்ற பூச்சிகளிடமிருந்து பணத்தை எப்படிப் பாதுகாத்துக் கொள்வது என்ற சில ஆலோசனைகளையும் அவர்கள் பகிர்ந்தனர். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வெளிநாடு

## நெதர்லாந்தில்

# ன தீப்பிடித்து எரிந்த சரக்குக் கப்பல்

# யிரம் கார்கள் எரிந்து நாசம்

## ய மாலுமி ஒருவர் உயிரிழப்பு



டு)

**லில் சரக்கு கப்பலில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் 3000 கார்கள் அடைந்ததுடன் இந்த தீ விபத்தில் இந்திய மாலுமி ஒருவரும் ததாக தெரிவிக்கப்படுகின்றது.**

கப்பலில் இருந்த 23 பணியாளர்கள் தீயை அடைக்க முயற்சித்த போதும் தோல்வியில் முடிந்தது. இதையடுத்து தகவலறிந்து 2 கப்பல்களில் விரைந்த தட்ச் கடலோர காவல்படை வீரர்கள் 2 புறங்களில் இருந்தும் தீயை அணைக்க பெரும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சரக்குக் கப்பலில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் 3000 கார்கள் எரிந்து சேதம் அடைந்ததுடன் இந்திய மாலுமி ஒருவர் உயிரிழந்த நிலையில் பலர் காயம் அடைந்தனர்.

சம்பவ இடத்திற்கு ஹெலிகொப்டர்கள் மற்றும் படகுகள் உடனடியாக அனுப்பி வைக்கப்பட்டன. விரைந்து செயற்பட்ட நெதர்லாந்து கடலோர காவல்படையினர் கப்பலில் இருந்து பணியாளர்களை மீட்டு மருத்துவமனையில் அனுமதித்தனர். இந்நிலையில் கப்பலில் ஏற்றிச் செல்லப்பட்ட மின்சார காரில் தீ விபத்து ஏற்பட்டு இருக்கலாம் என தகவல் வெளியாகி உள்ள நிலையில் அது தொடர்பில் விசாரணை நடைபெற்று வருவதாக கூறப்படுகின்றது. (நி-5)

## அமெரிக்க மத்திய வங்கியின் வட்டி வீதம் உயர்வு

(வோஷிங்டன்)

கடந்த 22 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு வட்டி விதத்தை அமெரிக்க மத்திய வங்கி உயர்த்தியுள்ளது.

கால் சதவீதம் உயர்வை அடுத்து வட்டி வீதம் 5.25 சதவீதத்தில் இருந்து 5.5 சதவீதமானது. அமெரிக்காவில் பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக வட்டி விகிதம் அதிக அளவில் உயர்த்தப்பட்டுள்ளது.

வட்டி வீதம் உயர்வால் அமெரிக்காவில் வீடு, வாகன கடன்களின் செலவு அதிகரிக்கும். அதேசமயம் பணவீக்கத்தைச் சமாளிக்க இன்னும் அதிகளவில் வட்டி விகிதத்தை இந்த ஆண்டு வங்கி உயர்த்தக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

அத்துடன் அமெரிக்க மத்திய வங்கியின் முடிவு என்பது, இந்திய ரிசர்வ் வங்கியிலும் எதிரொலிக்கும் என கூறப்படும் அதேவேளை இந்தியாவி லும் கடன்களுக்கான வட்டி அதிகரிப்பை செய்ய தூண்டலாம்.

அமெரிக்க வங்கியின் இந்த அதிரடி முடிவால் இந்திய பங்கு சந்தை தொடங்கி, கடன் பத்திர சந்தை, மியூச்சுவல் ஃபண்டுகள் வரையில் எதிரொலிக்கும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (நி-5)

## நாசாவில் திடீர் மின்தடை

(வோஷிங்டன்)

அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி மையமான நாசாவில் கடந்த செவ்வாய்க்கிழமை திடீரென மின்தடை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக விண்வெளி வீரர்கள் உடனான தொடர்பு 90 நிமிடங்கள் வரை துண்டிக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து பக்அப் கண்ட்ரோல் சிஸ்டம் மூலமாக விண்வெளி மையத்துடன் தொடர்பு ஏற்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து ரஷ்யாவின் தகவல் தொடர்பு அமைப்பின் மூலமாக 20 நிமிடத்தில் இது குறித்து தகவல் தெரிவிக்கப்பட்டதாக நாசா தெரிவித்துள்ளது.

விண்வெளி வீரர்கள் மற்றும் விண்வெளி மையத்துடன் தொடர்பு கொள்ள நாசாவில் தனியாக கட்டுப்பாட்டு மையம் உள்ளது. ஒருவேளை இந்த மையம் வேலை செய்யவில்லை என்றால் இதற்கு மாற்றுத் திட்டம் வகுத்துள்ளது. முதன்முறையாக விண்வெளி மையத்தை தொடர்பு கொள்ள நாசா இந்த மாற்று ஏற்பாட்டை பயன்படுத்தியுள்ளது.

இது குறித்து விண்வெளி நிலைய திட்ட மேலாளர் ஜோல் கூறுகையில், "விண்வெளி வீரர்களுக்கோ, நிலையத்திற்கோ எந்தவொரு ஆபத்தும் இல்லை" எனத் தெரிவித்துள்ளார். (நி-5)

## நைஜர் நாட்டில் ஆட்சியைக் கைப்பற்றிய இராணுவம்

(நியாமி)

மேற்கு ஆபிரிக்க நாடான நைஜரில் திடீரென இராணுவத்தினர் ஆட்சியைக் கைப்பற்றி ஜனாதிபதி முகமது பாசுமை சிறைப்பிடித்தனர்.

நைஜர் ஜனாதிபதி முகமது பாசும் அதிகாரத்தில் இருந்து நீக்கப்பட்டார் என மேற்கு ஆபிரிக்க நாட்டின் தேசிய தொலைக்காட்சியில் நேற்று முன் தினம் பிற்பகுதியில் தோன்றிய வீரர்கள் குழு கூறியதாக ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

நைஜரில் உள்ள அனைத்து நிறுவனங்களும் நிறுத்தப்பட்டுள்ளன என இராணுவ வீரர்கள் தேசிய தொலைக்காட்சியில் அறிவித்துள்ளனர்.

ஜனாதிபதிக்கு ஆதரவாக தலைநகர் நியாமியில் திரளான மக்கள் வீதிகளில் இறங்கினர்.

ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியின் பின்னணியில் இருந்த வீரர்கள் எதிர்ப்பை சமாளிக்க துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

ஆனாலும் நகரம் பெரும்பாலும் அமைதியாகவே இருந்தது. ஆபிரிக்க ஒன்றியம், ஐ.நா ஐரோப்பிய ஒன்றியம மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் இச்செயலுக்கு கண்டனம் தெரிவித்துள்ளன. (நி-5)

## சீனாவிற்கு செல்லவிருக்கும் புடின்



(மொஸ்கோ)

தற்போது நிலவும் போர் பதற்றத்தின் மத்தியில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் சீனாவிற்கு விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆபிரிக்க நாடுகளுடன் ஆசியாவை இணைக்கும் கட்டமைப்புத் திட்டங்களை உள்ளடக்கிய நிகழ்வொன்றில் பங்கேற்பதற்காகவே அவர் சீனாவிற்குச் செல்லவுள்ளதாக ரஷ்ய வெளியுறவுக் கொள்கை ஆலோசகர் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் சீனா விஜயத்தினைத் தொடர்ந்து அவர் துருக்கிக்கும் பயணிக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, எதிர்வரும் செப்டெம்பர் மாதம் இந்தியாவில் இடம்பெறவிருக்கும் ஜி -20 மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு ரஷ்ய ஜனாதிபதி புடினுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் இந்த மாநாட்டில் பங்கேற்பது தொடர்பில் இதுவரை தீர்மானிக்கவில்லை எனவும் ரஷ்ய வெளியுறவுக் கொள்கை ஆலோசகர் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதாரத்தில் நலிவுற்ற பல்கலை மாணவர்களுக்கு விசேட புலமைப் பரிசில் திட்டம்

(யாழ்ப்பாணம்)

பொருளாதார நலிவுற்ற பல்கலைக் கழக மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கும் திட்டத்தை வன்னி நேயம் நியூசிலாந்து அமைப்பின் நிதியுதவியுடன் இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் முன்னெடுக்கவுள்ளது.

கிளிநொச்சி/ முல்லைதீவு மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள்,போரால் பாதிக்கப்பட்ட குடும்பத்தைசேர்ந்த மாணவர்கள், விசேட தேவையுடைய மாணவர்கள், மிகவும் பொருளாதார நலிவான மிகத் தேவையுடைய மாணவர்கள் என்ற அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்பட்டு மாணவர்கள் தெரிவு செய்யபடுவர்.

விண்ணப்பப் படிவங்களை www.ivvsangam.com எனும் இணையதளத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

076 0389 828, 071 6788 730 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பினை ஏற்படுத்தி மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ளலாம். (நி-5)

# செம்பியன்பற்று வடக்கில் காணி சுவீகரிக்கும் முயற்சி

## மக்கள் எதிர்ப்பால் கைவிடப்பட்டது



(கரணவாய்)

மருதங்கேணி பிரதேச செயலகத்திற்குட்பட்ட செம்பியன் பற்று வடக்கு பகுதியில் தனியாருக்கு சொந்தமான காணியை கடற்படையினருக்கு சுவீகரிக்கும் நடவடிக்கை காணி உரிமையாளர், மக்கள் பிரதிநிதிகளின் எதிர்ப்பால் கைவிடப்பட்டது.

குறித்த கடற்படை முகாம் அமைந்திருக்கும் ஒன்றரை பரப்பு காணியை கடற்படையினருக்கு நிரந்தரமாக சுவீகரிப்பதற்கான அளவீட்டு பணிக்காக அரச நிலஅளவையாளர் தலைமையிலான உத்தியோகத்தர்கள் நேற்று வியாழக்கிழமை காலை வருகை தந்திருந்தனர்.

அளவீட்டு பணிக்கு காணி உரிமையாளர் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் எதிர்ப்பினை தெரிவித்திருந்ததையடுத்து குறித்த காணி அளவீட்டு பணியை நில அளவைத் திணைக்களத்தினர் தற்காலிகமாக இடைநிறுத்தி சென்றுள்ளனர்.

இதன்போது பிரதேச மக்களுடன் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன் உள்ளிட்ட பலர் பங்கேற்றிருந்தனர்.

இதேவேளை வடமராட்சி கிழக்கில் கட்டைக்காடு, முள்ளியான்,உடுத்துறை ஆகிய இடங்களில் தனியாருக்குச் சொந்தமான தலா ஒன்றரை பரப்பு காணியில் அமைந்துள்ள கடற்படை முகாமிற்கு குறித்த காணியை நிரந்தரமாகவே சுவீகரிக்கும் நோக்கில் அளவீட்டு பணியை மேற்கொள்ள கடந்த திங்கட்கிழமை, செவ்வாய்க்கிழமை, புதன்கிழமை ஆகிய மூன்று நாட்களிலும் எடுக்கப்பட்டிருந்த முயற்சிகள் காணி உரிமையாளர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளின் எதிர்ப்பால் தற்காலிகமாக கைவிடப்பட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (நி-60)

# இரணைமடுக்குளத்தின் கீழான சிறுபோக அறுவடை விழா

(கண்டாவளை)



கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் கீழான சிறுபோக அறுவடை விழா நேற்று பகல் நடைபெற்றுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசன குளமான இரணைமடுக் குளத்தின் கீழ் இவ்வாண்டு மேற்கொள்ளப்பட்ட சிறுபோக செய்கையின் அறுவடை விழா நேற்று பன்னங்கண்டி கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள சின்னக்காடு பகுதியில் நடை பெற்றுள்ளது.

இதில் மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு அறுவடையை ஆரம்பித்து வைத்துள்ளார்.

நிகழ்வில் துறைசார் திணைக்களங்களின் பதவி நிலை உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (நி-315)



வவுனியா வேப்பங்குளம் பத்திரகாளி அம்பாள் ஆலய ஆடிப்பூர விழாவும் ருதுசாந்தி வைபவமும் கடந்த சனிக்கிழமை சிறப்பாக இடம்பெற்றிருந்தன. இதன்போது 108சங்காபிஷேக நிகழ்வு, அம்பாளுக்கான மஞ்சள் நீராட்டு உள்ளிட்ட வைபவங்களுடன் இரவு ருதுசாந்தி நிகழ்வும் இடம்பெற்றிருந்தது. (படம்- சுபேசன்)

## கடவுச்சீட்டிற்கான கைவிரல் அடையாளத்தை பதிவு செய்யும் இயந்திரம் திருத்தப்பட்டு

# சேவை மீளவும் ஆரம்பம்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் கடவுச்சீட்டிற்கான கை விரல் அடையாளத்தை பதிவு செய்யும் இயந்திரம் திருத்தப்பட்டு மீளவும் சேவை இடம்பெறுவதாக பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

இணைய வழி ஊடாக கடவுச்சீட்டிற்கு விண்ணப்பித்து கைவிரல் அடையாளத்தை பிரதேச செயலகங்களில் பதிவு செய்யும் முறைமை அண்மையில் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது.

அந்தவகையில் யாழ் மாவட்டத்தில் பருத்தித்துறை மற்றும் தென்மராட்சி ஆகிய இரு பிரதேச செயலகங்களிலும் கைவிரல் அடையாளம் பதிவு செய்யப்பட்டு வந்த நிலையில் கடந்த இரு வாரங்களுக்கு முன்பாக தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் உள்ள கைவிரல் அடையாள பதிவு இயந்திரம் பழுதடைந்திருந்தது. இந்நிலையில், கடவுச்சீட்டிற்கு இணையம் ஊடாக விண்ணப்பித்து கைவிரல் அடையாளத்தை பதிவு செய்வதற்காக தென்மராட்சிப் பிரதேச செயலகத்தை தெரிவு செய்தவர்கள் பாதிக்கப்பட்டிருந்தனர்.

தற்போது இயந்திரம் திருத்தப்பட்டு மீள சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-30)

# முழங்காவில் பகுதியில் மதுபானசாலை திறப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் போராட்டம்

(கண்டாவளை)



கிளிநொச்சி முழங்காவில் பகுதியில் மதுபானசாலை திறப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து மக்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட முழங்காவில் பகுதியில் பாடசாலை ஆசிரியர் விடுதி, பொது விளையாட்டு மைதானம், ஆலயம் ஆகியவற்றின் மையப் பகுதியில் மதுபான சாலை திறப்பதற்கு முற்பட்ட சமயம் பொதுஅமைப்புகள் மற்றும் கிராம மக்கள் இணைந்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

பொலிஸாரால் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் படி கிளிநொச்சி நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட தடைக்கு எதிராக அதன் உரிமையாளரால் யாழ். மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு மூலம் குறித்த தடை உத்தரவு நீக்கப்பட்டது. இதற்கு எதிப்புத் தெரிவித்து பிரதேச மக்கள் நேற்று முன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தொடர்ந்து ஏ-32 மன்னார் பூநகரி வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்த நிலையில் சம்பவ இடத்திற்கு விரைந்த முழங்காவில் பொலிஸார் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுடன் கலந்துரையாடி நிலைமைகளை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர். (நி-5-315)

# 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில்

## அரசாங்கம் தனது முடிவை அறிவிக்க வேண்டும்

### மைத்திரி வலியுறுத்து

(கொழும்பு)

13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பாக ஜனாதிபதி ரணில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை முதலில் அறிவிக்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வலியுறுத்தியுள்ளார்.

சர்வகட்சி மாநாடு தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாக ஜனாதிபதி, அரசாங்கத்தின் நிலைப்பாட்டை முதலில் அறிவிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.அரசாங்கத்தின் யோசனை என்ன என்பதை முதலில் எமக்குத் தெரியப்படுத்த வேண்டும்.அந்த யோசனைகள் வெளிவந்தவுடன், நாம் இதுதொடர்பாக ஆராய முடியும்.

இதுதொடர்பாக கலந்துரையாடல்களை மேற்கொண்டு எமது யோசனைகளையும் இதில் முன்வைத்து அடுத்தக்கட்டத்தை நோக்கி செல்ல முடியும்" என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### இரண்டு எரிவாயு நிறுவனங்களும் எரிவாயுவை

# ஒரே விலையில் விற்பனை செய்வது தொடர்பில் அடுத்த வாரத்திற்குள் இறுதி முடிவு

(கொழும்பு)

நாட்டில் உள்ள இரண்டு உள்நாட்டு எரிவாயு நிறுவனங்களும் ஒரே விலையில் எரிவாயுவை விற்பனை செய்வது குறித்து அடுத்த வாரத்திற்குள் இறுதி முடிவு எடுக்கப்படும் என வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நாட்டிற்கான உள்நாட்டு எரிவாயு விநியோகம் நுகர்வோர் உரிமைகளை மீறும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது என அமைச்சர் குற்றம் சுமத்தியுள்ளார்.

தனது உத்தியோகபூர்வ முகநூல்- பக்கத்தில் ஒரு குறிப்பை வெளியிட்டுள்ள அவர்,

அண்மைக் காலங்களில் வர்த்தக நிறுவனங்கள் பாதிக்கப்பட்டுள்ள போதிலும் தற்போதைய பொருளாதார நெருக்கடியின் போது பெரும்பாலான பொருட்களின் விலைகளை குறிப்பிட்ட நிலையான மட்டத்தில் பராமரிக்க முடிந்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறாயினும் நாட்டிலுள்ள இரண்டு எரிவாயு இறக்குமதி நிறுவனங்களும் தமது விலை திருத்தத்தின் மூலம் நுகர்வோருக்கு பாரிய அநீதி இழைத்துள்ளதாகவும் இரு நிறுவனங்களினதும் உள்நாட்டு எரிவாயுக்கான ஒரே விலைகள் குறித்து எதிர்வரும் வாரத்திற்குள் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (நி)

# நான்கு வயது சிறுவன் கிணற்றில் வீழ்ந்து பலி

(கொழும்பு)

நான்கு வயதுடைய சிறுவன் ஒருவர் கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

குறித்த சிறுவனின் வீட்டிற்கு அண்மித்த பகுதியில் தோண்டப்பட்டிருந்த கிணறு பாதுகாப்பற்ற முறையில் நீண்ட காலமாக காணப்பட்டுள்ளது.

குறித்த கிணற்றில் வீழ்ந்தே சிறுவன் உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாரியபொல - பண்டார கொஸ்வத்த பகுதியிலேயே இந்த சம்பவம் பதிவாகியுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி)




# கடந்த தேர்தலில் மதவாதமும் இனவாதமும் தலைதூக்கியிருந்தது

### தம்பர அமில தேரர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

கடந்த காலத்தில் இடம்பெற்ற தேர்தலில் மதவாதமும் இனவாதமும் பாரியளவில் தலைதூக்கியிருந்ததாக தம்பர அமில தேரர் குறிப்பிட்டுள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு தொடர்பில் தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புக்களை தெளிவுபடுத்துவதற்காக ஜனாதிபதி அலுவலகத்தில் நடத்தப்பட்ட கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த தேர்தலில் மதவாதமும் இனவாதமும் பாரியளவில் தலைதூக்கியதால் அந்த அனுபவத்தை மக்கள் மறக்க முன் இந்தச் செயற்பாட்டை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்தார்.

ஜனாதிபதி தற்போது துணிச்சலான தீர்மானங்களை மேற்கொண்டு வருவதாகவும் அவ்வாறே மீண்டும் இவ்வாறான சம்பவம் இடம்பெறாதிருக்கத் தேவையான கல்விச் சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் எனவும் தம்பர அமில தேரர் மேலும் சுட்டிக்காட்டியிருந்தார். (நி)

# அஸ்வெசும நலன்புரி திட்டத்திற்காக காத்திருந்தவர் மயங்கி விழுந்து மரணம்

(கொழும்பு)

அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவிற்கான விண்ணப்பப்படிவம் பெற வரிசையில் காத்திருந்த நபர் ஒருவர் திடீர் சுகயீனம் காரணமாக உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் எல்ல பிரதேச செயலாளர் பிரிவு அலுவலகத்திற்கு முன்பாக நேற்று முற்பகல் இடம்பெற்றுள்ளதாக தெரியவருகிறது.

வரிசையில் காத்துக் கொண்டிருந்த குறித்த முதியவர் திடீரென மயக்கமுற்ற நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் நமுனுகுல - தன்னக்கும்புர பகுதியைச் சேர்ந்த ராமையா குழந்தைவேலு (வயது 76) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை எல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 180 | 240 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 300 | 450 | 450 | 400 |
| தக்காளி | 350 | 350 | 300 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 250 | 220 | 300 |
| கோவா | 250 | 220 | 250 | 320 |
| கரட் | 350 | 550 | 550 | 600 |
| பூசணி | 140 | 130 | 110 | 160 |
| புடோல் | 120 | 80 | 120 | 200 |
| வாழைக்காய் | 160 | 160 | 140 | 150 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 450 | 400 |
| பெரிய வெங்காயம் | 160 | 130 | 130 | 150 |
| பாகற்காய் | 350 | 300 | 400 | 400 |
| வெண்டக்காய் | 200 | 140 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 180 | 180 | 160 | 200 |
| பயற்றங்காய் | 300 | 200 | 150 | 200 |
| லீக்ஸ் | 250 | 240 | 240 | 300 |
| பீற்றூட் | 250 | 300 | 250 | 300 |
| கறிமிளகாய் | 350 | 350 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 400 | 300 | 250 | 300 |
| போஞ்சி | 450 | 500 | 480 | 600 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | 200 | 220 |
| கீரை - 1 பிடி | 80 | 70 | 80 | 80 |
| தேசிக்காய் | 200 | 300 | 180 | 450 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 65 | 60-80 |
| இராசவள்ளி | 300 | 350 | 250 | 250 |
| வெங்காயப்பூ | 250 | 150 | 240 | 300 |
| முள்ளங்கி | 100 | 80 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 100 | 50 |
| வல்லாரை | 50 | 35 | 50 | 60 |
| ஈரப்பலா | 180 | 150 | 80 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






"அது தெரிந்திருந்தபடியால்தான் சக்கரவர்த்தியிடம் ஓலையைக் கொடுத்துவிட்டு, இளையபிராட்டியிடம் போகும்படி அவனை அனுப்பினேன். இளவரசியை ஒரு தடவை அவன் பார்த்துவிட்டால் அப்புறம் தப்புவது ஏது? அவளுக்கு அடிமையாக இருக்க வேண்டியதுதானே?" என்றான்.

உடனே மலையமான் மிலாடுடையார், "ஒகோ! அப்படியா வந்தியத்தேவனுக்குச் சொல்லி அனுப்பியிருக்கிறாய்? எனக்கு தெரியாமல் போயிற்றே? தஞ்சாவூரை விட்டுக் கிளம்பிய பிறகு வந்தியத்தேவனிடமிருந்து ஏதாவது செய்தி வந்ததா? அல்லது இளையபிராட்டியிடமிருந்தாவது செய்தி வந்ததா?" என்றார்.

"ஒவ்வொரு நிமிஷமும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். இதுவரை ஒன்றும் செய்தி வரவில்லை."

"அருள்மொழி இவ்விடம் வந்த பிறகு உன் சகோதரியையும் இங்கே தருவித்துவிட வேண்டியதுதான். அப்புறம் நமக்கு ஒரு கவலையும் இல்லை. இளையபிராட்டியிடம் எல்லா யோசனையையும் விட்டுவிட்டு அவள் சொல்கிறபடி நாம் கேட்டு நடந்து வந்தால் போதும்"

"தாத்தா! இது விஷயத்தில் வந்தியத்தேவனைக் காட்டிலும் தாங்கள் மோசமாயிருக்கிறீர்களே?"

"ஆம் கரிகாலா! உன் சகோதரி இரண்டு வயதுக் குழந்தையாயிருந்த போதே கொடுங்கோலைக் கையில் பிடித்துவிட்டாள். என்னையும் உன் பாட்டியையும் தாய் தகப்பனையும் தன் இஷ்டப்படி ஆட்டி வந்தாள்.

இப்போதும் என் வரையில் அப்படித்தான். அவள் வைத்ததே எனக்குச் சட்டம். கரிகாலா! உன் சகோதரியைப் பற்றிச் சொன்னால் உனக்கு அது குறைவு என்று நினைக்காதே. உனக்கு அது பெருமையே தவிர வேறில்லை. இளையபிராட்டி குந்தவையைப் போன்ற அறிவுச் செல்வத்தைப் படைத்தவர் ஆண்களிலோ, பெண்களிலோ இது வரையில் பிறந்ததில்லை.

நமது முதன் மந்திரி அநிருத்தப் பிரம்மராயர் எப்படிப் பட்டவர் என்பது உனக்குத் தெரியுமில்லையா? அவரே இளையபிராட்டியிடம் யோசனை கேட்பார் என்றால், வேறு என்ன சொல்ல வேண்டும்?" என்று மிலாடுடையார் ஒரே பரவசமாகப் பேசினார்.

வந்தியத்தேவனிடம் அசூயை கொண்ட பார்த்திபேந்திரன், "அதெல்லாம் சரிதான் யார் இல்லை என்றார்கள்? ஆனால் ஒருவேளை வந்தியத்தேவன் இளையபிராட்டியைப் பார்ப்பதற்கு முன்னால் வேறு ஒரு பெண் முகத்தைப் பார்த்து மயங்கியிருந்தால் என்ன செய்வது? உதாரணமாக, அந்தப் பழுவூர் இளையராணி என்கிற மோகினியைப் பார்த்திருந்தால்?" என்றான்.

கடைசி வார்த்தைகளை அவன் சற்றுத் தாழ்ந்த குரலில் கூறிய படியால், கிழவரின் காதில் அது விழவில்லை. ஆனால் ஆதித்த கரிகாலன் காதில் விழுந்தது. அவன் சட்டென்று திரும்பிக் கண்களில் தீப்பொறி பறக்கப் பார்த்திபேந்திரனைப் பார்த்தான். அந்தப் பார்வை பல்லவ வீரனைக் கதிகலங்கச் செய்துவிட்டது.

மலையமான் பாறையிலிருந்து எழுந்து நின்று, "பார்த்திபேந்திரா! நீ நாளைக்கே இலங்கைக்குப் புறப்படுகிறாய் அல்லவா? வாலிபர்களாகிய உங்களுக்குப் பேசுவதற்கு எவ்வளவோ இருக்கும். நான் கிழவன், மெள்ள மெள்ள அரண்மனைக்குப் போய்ச் சேர்கிறேன். நீங்கள் பேச வேண்டியதைப் பேசிவிட்டுச் சாவகாசமாக வந்து சேருங்கள்" என்றார்.

அவர் சற்றுத் தூரம் சென்ற பிறகு பார்த்திபேந்திரன் ஆதித்தகரிகாலனைப் பார்த்து, "அரசே! என் தலைவா! தங்கள் மனத்தில் ஏதோ ஒரு சங்கடம் குடிகொண்டிருக்கிறது. ஏதோ ஒரு வேதனை தங்கள் உள்ளத்தை அரித்துக் கொண்டிருக்கிறது.

அது பழுவூர் இளையராணி சம்பந்தமானது என்பதை நான் அறிவேன். பெரிய பழுவேட்டரையரின் கல்யாணத்தைப் பற்றிய பேச்சு வரும் போதெல்லாம் தங்கள் தோற்றமே மாறிவிடுகிறது.

(தொடரும்...)




(நேற்றைய தொடர்ச்சி)

## புத்தி பலம்



அதைக் கேட்டு அந்த மூன்று பலசாலி நண்பர்களும் "ஹா! ஹா! ஹா! " என்று பலமான சிரிப்புச் சிரித்தனர். "நோஞ்சான் பயலான உனக்கும், பலசாலிகளான எங்களுக்கும் கயிறு இழுக்கும் போட்டியா? வெளியே சொன்னால் எங்களுக்குத்தான் அவமானம். போய் வேறு ஏதாவது வேலையிருந்தால் பார்! " என்றனர் அவர்கள்.

"இதோ பாருங்கள். ஆளைப் பார்த்து எடை போடாதீர்கள். எனக்குள் இருக்கும் பலம் உங்களுக்குத் தெரியாது. நீங்கள் உண்மையான பலசாலிகளாக இருந்தால் என்னோடு போட்டியிடுவீர்கள். நீங்களோ போலி. பலசாலிகள் போல வேஷம் போடுகிறீர்கள்!" என்று அவர்களைச் சீண்டி விட்டான்.

"சுண்டைக்காய் பயலே! எங்கள் பலத்தையா போலி என்றாய். உனக்குப் பாடம்கற்பித்தால்தான் புத்தி வரும். பிடி மறுமுனையை ஒரே ஒரு இழுதான். நீ எங்கோ பறந்து சென்று மண்ணைக் கவ்வப் போகிறாய்! " என்று சொல்லிவிட்டு கயிற்றின் ஒருமுனையைப் பிடித்தனர்.

இளங்கோ மேடு ஏறிப் போய் மறுபடியும் இறக்கத்தில் இறங்கி வண்டியில் கட்டப்பட்டிருந்த கயிறை இறுக்கமாகப் பிடித்தான். "ம்! இழுக்கலாம்! என்று கத்தினான். அந்த மூன்று நண்பர்களும் இளங்கோதான் கயிறு இழுப்பதாய் நினைத்துக் கொண்டு மிகச் சாதாரணமாய் இழுத்தனர். அவர்கள் நினைத்தது போல் அது அவ்வளவு சாதாரணமாய் இழுபடவில்லை.

திடீரென்று "இளங்கோவுக்கு பலம் இருக்கிறதோ' என்ற சந்தேகம் அவர்களுக்கு உண்டாயிற்று. ஆகவே, கயிற்றை இறுக்கமாகப் பிடித்து இழுத்தனர். ஆனால், இழுப்பது மிகவும் கடினமாக இருந்தது. மூன்று பேர் முகத்திலும் திகில் பரவியது. ஒரு நோஞ்சான் பயலிடம் தோற்றுப் போனால் அது எத்தனை அவமானம் என்று நினைத்த அவர்கள், தங்கள் பலம் கொண்ட மட்டும் கயிறை இழுத்தனர்.

எதிர்ப்பக்கமிருந்த இளங்கோ, தான் இழுப்பதை மெல்ல மெல்ல விட்டுக் கொண்டே இருந்தான். வண்டி இப்பொழுது மெல்ல மேட்டில் ஏறத் துவங்கியது. இளங்கோதான் மெல்ல பலத்தை இழந்து மேலே வருகிறான் என்று நினைத்த அவர்களுக்கு மிகுந்த சந்தோஷம் உண்டாகியது. "இந்த நோஞ்சான் பயலுக்கு ஏது இவ்வளவு பலம்' என்று நினைத்தவாறே மீண்டும் கயிறை வேகமாக இழுத்தனர்.

கடைசி நேர இழுவையில் சரக்கு வண்டி மேட்டின் மேலே ஏறிவிட்டது. அதைப் பார்த்துக் கொண்டு சிரித்தபடி வந்தான் இளங்கோ.

அவர்களுக்கு அப்பொழுதுதான் விஷயமே புரிந்தது. இவ்வளவு நேரம் நாம் இழுத்தது இளங்கோவின் வண்டியை என்று. மூவர் முகத்திலும் அசடு வழிந்தது. இறக்கத்தில் இறங்கி அவர்களிடம் வந்த இளங்கோ, "மூளை பலம் என்பது இதுதான்," என்று சொல்லி நமுட்டு சிரிப்பு சிரித்து விட்டு தனது வண்டியை சமதளத்தில் லாவகமாக இழுத்துக் கொண்டு போனான்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை ஊடுருவும் சூரிய ஒளி போன்றது.
அதை யாராலும் மூடிமறைக்க முடியாது.
– மில்டன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தோல்வியில் முடிப்பதற்காக கூட்டப்பட்ட சர்வகட்சி மாநாடு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூட்டிய சர்வகட்சி மாநாடு தோல்வியில் முடிந்துள்ளது.

ஜனாதிபதி ரணில் கூட்டுகின்ற சர்வகட்சி மாநாடு தோல்வியில் முடியும் என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம்.

இதை நாம் கூறும்போது, சர்வகட்சி மாநாடு தோல்வியடையாது என நம்பிய ஒருவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மட்டுமே என்று நீங்கள் யாரேனும் நினைத்துவிடலாம்.

அவ்வாறு நினைத்தால் அது மிகப்பெரும் தவறு.

ஆம், சர்வகட்சி மாநாடு தோல்வியில் முடிய வேண்டும் என்பதற்காகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வகட்சி மாநாட்டைக் கூட்டினார்.

அதாவது சர்வ கட்சி மாநாடு தோல்வியில் முடியும் என்று அனுமானிக்கின்ற நிலைமை வேறு. ஆனால் இது அவ்வாறல்ல.

மாறாக, தோல்வியில் முடிப்பதற்காக கூட்டப்பட்டதே இச் சர்வகட்சி மாநாடாகும்.

ஆம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எந்த நாட்டுக்குச் சென்றாலும் எந்த நாட்டுப் பிரதிநிதிகளைச் சந்தித்தாலும் அவர்கள் அவரிடம் கூறுகின்ற ஒரே விடயம் இனப் பிரச்சினைக்குத் தீர்வைக் காணுங்கள் என்பது தான்.

இவ்வாறு அவர்கள் கூறும்போது, நிச்சயம் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும். அதற்கான முயற்சிகள் எடுக்கப்படும் என்பது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பதிலுரையாக இருக்கும்.

இங்குதான் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு; தான் திறந்த மனத்துடன் இருப்பதாகவும் அதற்கான முயற்சிகளைத் தான் முன்னெடுப்பது போலவும் வெளிப்படுத்த வேண்டிய கட்டாய தேவை ஜனாதிபதி ரணிலுக்கு ஏற்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில்தான் சர்வகட்சி மாநாடு கூட்டப்பட்டது.

சர்வகட்சி மாநாடு தோல்வியில் முடிவதன் மூலம் தமிழ் மக்களுக்கு அதிகாரம் வழங்காமல் தவிர்க்கப்படுவதுடன் ஏனையவர்களின் ஒத்துழைப்புக் கிடைக்காமையால் இனப் பிரச்சினைக்கான தீர்வை தன்னால் எட்ட முடியாமல் போயிற்று என்பதாகக் காட்டுவதும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இராஜ வியூகமாக இருந்தது. அதுவே நேற்று முன்தினம் (26) நடந்தேறியுள்ளது.

இருந்தும் சில இடங்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிதானம் இழந்து, தமிழ்ப் பிரதிநிதிகளுடன் கடுமையாகக் கதைத்தமை அவரின் உள்நோக்கத்தை துப்புத் துலக்குகின்றது.

பரவாயில்லை. இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது சிங்கள ஆட்சியாளர்களால் ஒரு போதும் சாத்தியமாகாது என்பது எழுதப்பட்ட விதியாக இருக்கும்போது சர்வகட்சி மாநாடு தோல்வியில் முடிந்ததற்காக நம்மவர்கள் யாரும் கவலைப்பட்டு விடாதீர்கள்.

ஏனெனில் தோல்வியில் முடிப்பதற்காகக் கூட்டப்பட்டதே இச்சர்வகட்சி மாநாடாகும்.

# தேர்தல் நடத்தும் நோக்கம் ஜனாதிபதி ரணிலிடம் இல்லை

## சர்வகட்சி மாநாடு தொடர்பில் சுமந்திரன் எம்.பி

(யாழ்ப்பாணம்)

தேர்தலை நடத்துவதற்கான நோக்கம் ஜனாதிபதி ரணிலிடம் இல்லையென தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு நேற்றுமுன்தினம் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதியிடம் கோரிக்கை முன்வைத்த போதிலும் அதனை அவர் நிராகரித்ததாக சுமந்திரன் எம்.பி தெரிவித்தார்.

வடமராட்சி குடத்தனையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் சுமந்திரன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரப் பகிர்வு சம்பந்தமாக உரையாடுவதற்கு என்று கட்சி தலைவர்களுக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

அந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், புளொட் தலைவர் த.சித்தார்த்தன், ரெலோ கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டார்கள். அந்தக் கூட்டத்தில் நானும் கலந்து கொண்டிருந்தேன்.

இந்தக் கூட்டத்தில் அதிகாரப் பகிர்வு என்று பொலிஸ் அதிகாரம் தவிர்ந்த 13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது பற்றி அவர் பேசியிருந்தார்.

எங்களுக்கு அதில் ஆட்சேபனை இருக்கவில்லை, இருக்கின்ற அதிகாரங்களை அரசியலமைப்புக்கு உகந்த வகையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். ஆனால் பொலிஸ் அதிகாரம் தவிர்ந்த என்று சொல்லுவதை நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது. அது அரசியலமைப்பில் இருக்கின்ற விடயம்.

சம்பந்தன் ஆரம்பத்திலேயே எங்களுடைய கருத்தை வெளிப்படையாக சொல்லி இருந்தார். அதாவது தொடர்ந்து நாங்கள் சந்தித்து சந்தித்து பேசுகின்றோமே தவிர உருப்படியாக எதுவும் நடக்கவில்லை. உடனடியாக நடைமுறையில் இந்த அதிகாரப் பகிர்வை நாங்கள் காண வேண்டும்.

இல்லை என்று சொன்னால் உள்ளக அதிகாரப் பகிர்வுக்கு நாங்கள் தயாராக இருக்கின்ற அதே வேளையில், அது கிடைக்காவிட்டால் வெளியகமாக எங்களுடைய சுயநிர்ணய உரித்தை கேட்பதற்கு நாங்கள் தயாராகுவோம் என்று சம்பந்தன் சொன்னார். அதற்கு ஜனாதிபதி பதில் சொல்லியிருக்கவில்லை.

ஆனால் மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் காலம் கடத்திக் கொண்டு மாகாண சபை முறைமை பற்றி பேசுவது முறையற்றது என பலர் சுட்டிக் காட்டியபோது, நான் தற்போது கொண்டு வந்திருக்கின்ற தனிநபர் சட்ட மூலத்திற்கு அமைவாக மாகாண சபை தேர்தல் வைக்க முடியும் என சுட்டிக்காட்டியபோதுதான் ஜனாதிபதி சொன்னார் தேர்தல் இப்போது தேவையில்லை. அதிகாரப் பகிர்வு எப்படி இருக்க வேண்டும் என்று நாங்கள் பேசுவோம் என சொன்னார்.

அந்த வேளையில் தான் நாங்கள் வலியுறுத்தினோம். இல்லை தேர்தலும் நடத்தப்பட வேண்டும். இதை நாங்கள் ஆரம்பத்தில் இருந்தே சொல்லி இருக்கின்றோம் என்று சொன்னபோது, நீங்கள் இந்த இரண்டிலே ஒன்றைத்தான் தேர்ந்தெடுக்க முடியும். ஒன்று தேர்தல் அல்லது அதிகாரங்கள் பகிர்வது இரண்டையும் ஒரே நேரத்தில் கேட்க முடியாது என திட்டவட்டமாகச் சொன்னார்.

இது ஒரு முரண்பட்ட கருத்து அல்ல இரண்டும் ஒரே திசையில் தான் இருக்கிறது. அப்படி இருக்கின்ற போது நீங்கள் ஏன் ஒன்று மட்டும் தான் கேட்க வேண்டும் என சொல்கிறீர்கள் என்று நான் அவரோடு வாக்குவாதப்பட்ட போது, முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் சொன்னார் தேர்தல் தேவையில்லை அதிகாரப் பகிர்வு பற்றி பேசுவது தான் முக்கியம் என்று சொன்னார்.

அந்தக் கருத்தோடு நாங்கள் உடன்படவில்லை. ஆகவே தமிழ் தேசியக் கூட்டமைப்பாக மூன்று கட்சித் தலைவர்களும் அங்கே இருக்கின்றபோது அவர்களின் அனுமதியோடு நான் விக்னேஸ்வரன் ஐயா சொன்னதை மறுத்துரைத்தேன்.

பல வருடங்களாக காலதாமதமாகி இருக்கிறது மாகாண சபைத் தேர்தல், ஆகவே அது உடன் நடத்தப்பட வேண்டும். தேர்தல் நடத்துவதால் அதிகாரப்பகிர்வு சம்பந்தமாக கதைக்க கூடாது என்று எங்கேயும் இல்லை. ஆகவே ஜனாதிபதி தர்க்க ரீதியாக ஏற்றுக் கொள்ள முடியாத ஒரு கருத்தை சொல்லிக் கொண்டிருக்கிறார்.

நாங்கள் இரண்டையும் கேட்கின்றோம் என்று சொல்லியபோது, அப்படியானால் நாங்கள் கூட்டத்தை முடித்துக் கொள்வோம் என சொல்லிவிட்டு ஜனாதிபதி உடன் வெளியில் போய்விட்டார்.

ஆகவே கூட்டம் அரைகுறையுடன் நிறைவடைந்திருக்கிறது. தேர்தலைப் பற்றி பேசினால் ஜனாதிபதிக்கு பயம் பிடித்துவிடுகிறது என தெரிவித்தார். (ம-7)

## மோ.சைக்கிள் விபத்து இரு மாணவர்கள் பலி

மோட்டார் சைக்கிள் விபத்தில் பாடசாலை மாணவர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் மொனராகலை, தம்பகல்ல பிரதேசத்தில் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

குறித்த இருவரும் பயணித்த மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகி மின்கம்பத்தில் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் தம்பகல்ல பிரதேசத்தைச் சேர்ந்த தருஷ சந்தீப மற்றும் ருவன்வெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த சஸ்மித எஷான் ரணவீர ஆகிய பாடசாலை மாணவர்களே உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உறவினர்களான இரண்டு மாணவர்களும் 16 வயதுடையவர்கள் என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (ம-7)

## இளவாலையில் தீயில் எரிந்த பனைகள்

(அராலி)

இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மெய் கண்டான் பாடசாலைக்கு அருகேயுள்ள காணியில் நின்ற பனைகள் எரிந்து நாசமாகியுள்ளன.

பனைகள் எரிவதாக ஊர்ப் பொதுமக்கள் கிராம சேவகருக்கு அறிவித்தல் வழங்கினர். அதனடிப்படையில் கிராமசேவகர் இளவாலை பொலிஸாருக்கு தகவல் வழங்கினார்.

இந்நிலையில் அங்கு வந்த பொலிஸார் மக்களது உதவியுடன் தீயை அணைத்தனர். இருப்பினும் பனை மரங்கள் சில எரிந்து நாசமாகியுள்ளன.

அருகேயுள்ள பற்றைகளுக்கு தீ வைக்கும்போது அத் தீ பனையிலும் பற்றியிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. எனினும் சம்பவம் குறித்து எவரும் கைது செய்யப்படவில்லை. (ம-7,104)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **சனிக்கிழமை காலை 9.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை வவுனியா பிரதேசத்தில்** அவறந்துலாவ, நவகம்மானே, பாவற்குளம், பழையனூர், பாவற்குளம்,பெரிய உளுக்குளம்தீவரகம, இராஜேந்திரகுளம், சூடுவெந்த புலவு கோபுரம், சூடுவெந்தபுலவு, துடாரிக்குளம், ட்ராக் 07 - பாவற்குளம், உளுக்குளம், உளுக்குளம்எல்.பி. குடியிருப்பு ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

நிதி மோசடி விவகாரம்

## சாவகச்சேரி சதொச கிளையின் முன்னாள் முகாமையாளர் கைது

சாவகச்சேரி சதொச கிளையின் முன்னாள் முகாமையாளர் நிதி மோசடி விவகாரத்தில் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடி காலகட்டத்தில் கடந்த ஒரு வருட காலமாக முகாமையாளராக பணியாற்றிய வவுனியாவைச் சேர்ந்த நபரே இவ்வாறு கைது செய்யப்புட்டுள்ளார்.

மேற்படி சந்தேக நபர் 74 இலட்சம் ரூபாயை சாவகச்சேரி சதொச கிளையில் இருந்து மோசடி செய்த குற்றச்சாட்டிலேயே கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் முகாமையாளர் பதவியில் இருந்து விலகி கெக்கிராவ பகுதியில் தலைமறைவாகியிருந்த நிலையில்கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7.30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும் விஜயன் வருகையிலிருந்து

## பொலநறுவை யுகம் முடியும் வரை- பகுதி I

27

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



இவரது கதாபாத்திரத்தைக் கொண்ட கதைகளில் புகழ் பெற்றவை பொன்னியின்செல்வன்.

உத்தம சோழன் கி.பி. 985-ஆம் ஆண்டில் இறந்தார். அவருக்கு குறைந்த பட்சம் ஒரு மகனாவது (மதுராந்தகன் கண்டராதித்தன்) இருந்தார். இருந்தாலும் ஆட்சி உரிமை இரண்டாம் பராந்தக சோழன் குடும்பத்திற்கு சென்று விட்டது. உத்தம சோழனுக்குப் பின்னர் இராசராச சோழன் அரசன் ஆனார். மதுராந்தக கண்டராதித்தர் இராசராச சோழன் அவையில் அதிகாரியாக பணி செய்தார்.

**இலங்கையில் சோழர் ஆட்சி (993-1070)**

பத்தாம் நூற்றாண்டின் நாலாம் காற்பகுதி தொடக்கம் சுமார் 70 ஆண்டு காலம் இலங்கையில் சோழர் ஆட்சி நிலவியது. இலங்கை அரசன் ஐந்தாம் மகிந்தன் என்பவன், சோழர்களுக்கும் அவர்களின் பகைவர்களான பாண்டியர், சேரர் ஆகியோருக்கும் இடையிலான போட்டியில் சோழரின் பகைவர்களுக்கு ஆதரவு கொடுத்ததாகத் தெரிகிறது. இதனால் சோழ மன்னனான முதலாம் இராஜராஜன் கி.பி 993 இல் இலங்கையின் மீது படையெடுத்து தலைநகரமான அநுராதபுரத்துடன் சேர்த்து நாட்டின் வடபகுதியைக் கைப்பற்றிக் கொண்டான். அநுராதபுரத்தைக் கைவிட்டுப் பொலநறுவை என்னும் இடத்தைத் தலைநகரம் ஆக்கினான். சோழர் ஆட்சிக்குட்பட்ட இலங்கையின் பகுதி மும்முடிச் சோழ மண்டலம் எனப் பெயரிடப்பட்டு தலைநகரான பொலநறுவையும் ஜனநாத மங்கலம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. ஆயினும் இலங்கையின் தென்பகுதியான ருகுணு இராச்சியம் 24 வருடங்கள் (993-1017) ஐந்தாம் மகிந்த மன்னன் தலைமையில் சோழர் இடையூறு இன்றி ஆட்சி நடத்தி வந்தது.

**1 ஆம் இராஜேந்திரசோழன் (1012 -1044)**

இராஜராஜன் 1012 இல் தனது மகன் ராஜேந்திர சோழனை அரசாங்கத்தில் இணைத்தார். பின்னர் அவர் 1014 இல் இறந்தார். இராஜேந்திரசோழன் 1014 இல் மன்னனாக அரியணை ஏறினான்.

கி.பி 1017 ஆம் ஆண்டில், பாண்டியன் இலங்கையில் மறைத்து வைத்திருந்த மணி முடியையும் செங்கோலையும் கைப்பற்றுவதற்காக முதலாம் இராசேந்திரசோழன் எஞ்சியிருந்த ருகுணு இராச்சியத்தையும் படைகளை அனுப்பிக் கைப்பற்றினான். இதன் மூலம் முழு இலங்கையையும் சோழர் ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தான். இந்த தாக்குதலின் போது ருகுணு இராச்சியத்தின் மன்னனான ஐந்தாம் மகிந்தன், ராணிகள் மற்றும் அரச ஆபரணங்களை சோழர் படை கைப்பற்றியது. சோழரினால் கைது செய்யப்பட்ட ஐந்தாம் மகிந்தன் 1029 இல் சோழர் சிறையில் மரணமானான். சோழர் ஆட்சியில் இலங்கையின் மன்னர்களாக முதலாம் இராஜேந்திரசோழன் (1012-1044), முதலாம் இராஜேந்திரசோழனின் மகன்களான ராஜாதிராஜசோழன் (1018-1054), இரண்டாம் இராஜேந்திரசோழன் (1051-1063), வீரராஜேந்திரசோழன் (1063-1070), வீரராஜேந்திரசோழனின் மகனான அதிராஜேந்திரசோழன் (1067-1070) ஆகியோர் இருந்தனர்.

**பொலநறுவை இராசதானியை ஆண்ட சோழ அரசர்கள் பற்றி.......**

**முதலாம் இராஜராஜ சோழன் (கி.பி. 985-1014)**

அருண்மொழிவர்மன் அல்லது அருள்மொழிவர்மன் என்கின்ற பேரரசர் இராசகேசரிவர்மன் முதலாம் இராஜராஜசோழன் சோழ பேரரசின் புகழ் பெற்ற மன்னர்களுள் ஒருவனாவார். "சோழ மரபினரின் பொற்காலம்" என்று போற்றத்தக்க வகையில் ஆட்சி செய்த இம்மன்னனின் ஆட்சிக் காலம் கி.பி. 985 முதல்கி.பி. 1014 வரையாகும். இவர் மகன் முதலாம் இராஜேந்திரன் காலத்தில் சோழ நாடு கடல் கடந்து-பரவிய பெருமைக்கு அடிகோலியதும் இம்மன்னனே. இராஜராஜசோழனின் முப்பதாண்டு ஆட்சிக் காலமே சோழப் பேரரசின் வரலாற்றில் மிக முக்கியமாக விளங்கியது. ஆட்சி முறை, இராணுவம், நுண்கலை, கட்டடக்கலை, சமயம், இலக்கியம் ஆகிய பல்வேறு துறைகளில் புதிய எழுச்சியைக் கண்ட சோழப் பேரரசின் கொள்கைகள் இவருடைய ஆட்சியில் உருப்பெற்றவையே.

இவர் கி.பி. 957 முதல் கி.பி. 973 வரை சோழ நாட்டை ஆண்ட சுந்தர சோழனுடைய இரண்டாவது மகனாவார். இவரது இயற்பெயர் "அருண்மொழிவர்மன்". இராசகேசரி அருண்மொழிவர்மன் என்ற பெயராலேயே தன் ஆட்சியின் தொடக்க காலத்தில் இம்மன்னர் அழைக்கப்பட்டார். இவர் ஆட்சியின் 3 ஆம் ஆண்டு முதலே இராஜராஜசோழன் எனப்பட்டார். 988 இல் தந்தை இறந்ததும் இவர் உடனடியாகப் பதவிக்கு வரவில்லை. 15 வருடகால உத்தம சோழனின் ஆட்சிக்குப் பின்னரே இவர் செத்திரு முறைப்படி ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

விஜயாலய சோழன் நிறுவிய சோழ அரசு இவர் காலத்திலும் இவர் மகன் இராஜேந்திர சோழன் காலத்திலும் மிக உயர் நிலை எய்தியது. இராஜராஜனின் காலம் பிற்காலச் சோழர் வரலாற்றில் மட்டுமன்றித் தென்னிந்திய வரலாற்றிலேயே ஒரு பொற்காலமாகும். இராஜராஜன் பல பெண்களை திருமணம் செய்திருக்கிறார். அவருடைய பட்டத்து அரசியாக உலக மகாதேவியார் என்பவர் இருந்துள்ளார்.

**இராஜேந்திரசோழன் (கி.பி. 1012-1044)**

இராஜேந்திரசோழன், சோழர்களின் புகழ் பெற்ற மன்னர்களுள் ஒருவரும் தஞ்சை பெரிய கோவிலை கட்டியவருமான முதலாம் இராஜராஜ சோழனின் மகனும் தென்னிந்தியாவின் புகழ் பெற்ற மன்னர்களுள் ஒருவருமாவார். விஜயாலய சோழன் காலத்தில் தொடங்கிய சோழப் பேரரசு இராஜேந்திரன் காலத்தில் அதன் பொற்காலத்தை அடைந்தது. சோழ மன்னர்களில் இராஜேந்திரனுக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை ஏன்ற பெருமை வாய்ந்தவர்.

தன்னுடைய ஆட்சிக் காலத்தில் இராஜேந்திர சோழன் ஏற்கனவே பரந்து விரிந்திருந்த சோழப் பேரரசின் பரப்பை மேலும் விரிவுபடுத்தினார். இவர் ஆட்சி செய்த பகுதிகள் தென் இந்தியா பகுதிகள் ஆன தற்போதைய தமிழ்நாடு, ஆந்திர பிரதேசம், கருநாடகா, கேரளம், தெலுங்கானா, சத்தீசுகர், ஒரிசா, மேற்கு வங்காளம் ஆகிய பகுதிகளும் தென்கிழக்கு ஆசியா நாடுகள் அனைத்தும் இவர் ஆட்சி காலத்தில் இருந்தது. இராஜேந்திரன் ஆட்சிக் காலத்தில் சோழநாடு இந்தியா, இலங்கை, மாலைதீவு, மலேயா (சிங்கப்பூர் - மலேசியா), சுமத்ரா, கம்போடியா, இந்தோனேசியா, மியான்மர், வங்கதேசம் ஆகியவற்றை உள்ளடக்கிய மிகப் பெரிய நிலப் பரப்பாக இருந்தது. இராஜேந்திர சோழனே முதன் முதலில் அயல் நாட்டிற்குப் பெரும் படை எடுத்துச் சென்ற முதல் தமிழ் மன்னன் ஆவார்.

இராஜராஜ சோழரின் ஆட்சிக் காலத்திலேயே (கி.பி. 1012), இராஜேந்திரசோழன் இணை அரசனாகப் பொறுப்பேற்றுக் கொண்டான். இராஜராஜ சோழரின் இணை அரசனாக பதவியேற்ற இரண்டு ஆண்டுகளில் இராஜேந்திரன் பட்டத்து அரசனாக முடிசூட்டப்பட்டான். தன்னுடைய ஆட்சிக்காலத்தின் தொடக்கத்திலேயே தன்னுடைய மகனான இராஜாதிராஜ சோழனை இளவரசனாகப் பட்டம் சூட்டி ஆட்சிப் பொறுப்புக்களை அவனுடன் பங்கிட்டுக் கொண்டான். இந்தப் பழக்கம் தனக்குப் பிறகு யார் முடி சூட்டப்பட வேண்டும் என்பதில் ஏற்படும் குழப்பங்களைத் தவிர்க்கவே நடைமுறைப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

முதலாம் இராஜராஜ சோழன் தொடங்கி வைத்த ஈழத்தின் மீதான படையெடுப்பை நிறைவு செய்யும் விதமாகவும் பராந்தக சோழன் காலத்திலேயே தேடப்பட்டுக் கண்டறிய முடியாமல் போன, பாண்டிய அரசர்களால் சிங்கள அரசர்களிடம் கொடுத்து வைக்கப்பட்டதாகச் சொல்லப்படும் இந்திரன் பாண்டியர்களுக்கு அளித்ததாக கருதப்படும் இரத்தினக் கற்கள் பொறித்த வாளையும் முத்து மாலையையும் கண்டறியும் வித்மாதவும் ஈழ மண்டலத்தின் தென்கிழக்கிலுள்ள ரோகண நாட்டின் மீது பொ.ஊ. 1017/1018 இல் இந்தப் படையெடுப்பு நடத்தப்பட்டது. படையெடுப்பில் பெரும் வெற்றி பெற்று இராஜேந்திரன் ஈழத்தின் முக்கிய இடங்களைகைப் பற்றி சிங்களபட்டத்து அரசன், அரசி, இளவரசி ஆகியோரைச் சிறைப்படுத்திச் சோழ நாட்டிற்குக் கொண்டு வந்தான். சிங்கள அரசன் ஐந்தாம் மகிந்தன் பன்னிரெண்டு ஆண்டுக் காலச் சிறை வாசத்துக்குப் பிறகு சிறையிலேயே இறந்து போனான். இதைப் பற்றி சிங்கள சுயசரிதைக்கு ஒப்பான "மகாவம்சமும்" கூறுகிறது.

இராஜராஜ சோழனைப் போன்றே இராஜேந்திரனும் சிறந்த விருதுகள் பலவற்றைப் பெற்றான். இவற்றில் குறிப்பிடத்தக்கவை, முடி கொண்ட சோழன், பண்டித சோழன் என்பன. இவன் ஒரு முறை வீரராஜேந்திரன் என்றும் அழைக்கப்பட்டிருக்கிறான். இவற்றையெல்லாம் விட இம்மன்னனே விரும்பிச் சிறந்த விருதாகக் கருதி ஏற்றது, "கங்கை கொண்டசோழன்" என்பதாகும். இவ்விருது இம்மன்னன் புதிதாக நிறுவிய தலைநகரின் பெயரைக் கொண்டது.

திருபுவன அல்லது வானவன் மாதேவியார், முக்கோலான், வீர மாதேவி என்போர் இராஜேந்திரனின் மனைவியர் ஆவர். வீர மாதேவி என்பாள், இம் மன்னனுடன் உடன் கட்டை ஏறி உயிர் துறந்தாள். இவன் புதல்வர்களில் மூவர் இராஜாதிராஜன், இராஜேந்திரன், வீரஇராஜேந்திரன் ஆகியோர் இவனுக்கு அடுத்தடுத்துச் சோழ அரியணையில் அமர்ந்தனர். இம்மூவரைத் தவிர வேறு புதல்வர்களும் இருந்தனர்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வசந்த முதலிகே...

நீதிமன்றம் பிறப்பித்துள்ள பிடியாணை ஒன்றுக்கு அமைய அவர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் கறுவாத்தோட்டம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை கடந்த ஆண்டு நடைபெற்ற போராட்டத்தின் பின்னர், வசந்த முதலிகே பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு 90 நாட்களுக்கு மேலாக தடுத்து வைக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.(ம-7)

## கிணற்றுக்குள்...

இதில் சந்திரகுமார் பாதுசன் (வயது-4) என்ற சிறுவனே உயிரிழந்தவராவார்.

குறித்த சிறுவனின் தாயார் நாளாந்த கூலி வேலைக்காக சென்றபொழுது வீட்டில் தந்தையுடன் இருந்த சிறுவன் மதியம் 1.30 மணியளவில் தந்தையார் நித்திரையில் இருந்தபொழுது விளையாடிக்கொண்டிருந்த சிறுவன் தமது காணிக்குள் அமைந்திருந்த பாதுகாப்பற்ற (மண்) கிணற்றில் விழுந்துள்ளார்.

திடீரென கண் விழித்த தந்தை சிறுவனைக் காணாது தேடிய நிலையில் தமது காணியில் இருந்த பாதுகாப்பற்ற கிணற்றில் சேற்றில் மூழ்கிய நிலையில் காணப்பட்டதையடுத்து சிறுவனை உடனடியாக மீட்டு கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியிலேயே உயிரிழந்துள்ளார்.

சிறுவனின் சடலம் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் பிரேத பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக கிளி நொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,316)

## 5 முஸ்லிம்...

சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்ட 5 அமைப்புகள் மீதான தடையை நீக்கி பாதுகாப்பு அமைச்சு வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளார். (ம-7)

## தமிழர்...

மணிக்கு முல்லைத்தீவு நீதிமன்றுக்கு அருகில் ஆரம்பிக்கும் கவனயீர்ப்பு பேரணியானது முல்லைத்தீவு நீதிமன்றுக்கு முன்பாகச் சென்று மாங்குளம் முல்லைத்தீவு வீதியூடாக மாவட்ட செயலகத்தை வந்தடைந்து அங்கு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றும் மேற்கொள்ளப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த மாபெரும் கவனயீர்ப்பு போராட்டத்துக்கும் பூரண ஹர்த்தாலுக்கும் வடக்கு கிழக்கின் எட்டு மாவட்டங்களின் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளினால் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் இன்று மாபெரும் கவனயீர்ப்பு போராட்டத்துக்கும் பூரண ஹர்த்தாலுக்கும் பல்வேறு தரப்பிலிருந்தும் முழுமையான ஆதரவு கிடைக்கப் பெற்று வருகிறது. யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஊழியர் சங்கம், அரசியல் கட்சிகள், தனியார் போக்குவரத்து சங்கங்கள், வர்த்தக சங்கங்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் தமது ஆதரவை வெளியிட்டு வருகின்றனர்.

இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் இன்று முன்னெடுக்கப்படவுள்ள வடகிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அழைப்பில் அனைவரும் இணைந்து முன்னெடுக்கவுள்ள பாரிய போராட்டம் மற்றும் ஹர்த்தாலுக்கு முல்லைத்தீவு மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் பூரண ஆதரவு வழங்குவதோடு இன்று போக்குவரத்து சேவைகள் எவையும் இடம்பெறாது என முல்லைத்தீவு மாவட்ட தனியார் போக்குவரத்து உரிமையாளர்கள் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கம், முல்லைத்தீவு வர்த்தக சங்கம், மல்லாவி வர்த்தக சங்கம், உடையார் கட்டு வர்த்தக சங்கம்,மாங்குளம் வர்த்தக சங்கம், ஒட்டுசுட்டான் வர்த்தக சங்கம், உள்ளிட்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் வர்த்தக சங்கங்கள் தங்களது கடைகளை மூடி இன்றைய போராட்டத்துக்கு தமது முழுமையான ஆதரவை வழங்குவதாக அறிவித்துள்ளனர். (ம-7,33,104)

## நல்லூர்...

அக்கடிதத்தில், தற்போது புகையிரத சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில் நல்லூர் கந்தசுவாமி கோவில் பெருந்திருவிழா 21.08.2023 ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் தினமும் புகையிரத சேவைகளின் எண்ணிக்கையை அதிகரித்து அடியவர்களின் பயண வசதிகளை இலகுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார். (ம-7)

## உண்மையைக்...

குழுவை நிறுவுவதன்மூலம்இனப் பிரச் சினையால் பாதிக்கப்பட்டுள்ள சகல பிரிவினருக்கும் உண்மையைக் கண்டறிய வாய்ப்பு கிடைக்கும் என அலி சப்ரி தெரிவித்தார்.

குறித்த ஆணைக்குழு சுயாதீனமாக செயற்பட வேண்டும் எனவும் அதற்கான வசதிகளை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

சட்டம் ஸ்தாபிக்கப் பட்டதன் பின்னர் ஆணைக் குழுவிற்கு முழுமையான அதிகாரம் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த சமன் ரத்னப்பிரிய, "மூன்று தசாப்த கால யுத்தத்தினால் இன, மத வேறுபாடின்றி அனைவரும் பாரிய சேதங்களை சந்திக்க நேரிட்டது" என்று தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் முறையான விசாரணை நடத்தப்பட வேண்டிய தேவை நாட்டிற்குள்ளும் சர்வதேச ரீதியிலும் எழுந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதற்காக ஸ்தாபிக்கப்பட்ட

பல்வேறு ஆணைக்குழுக்கள் முன்வைத்த யோசனைகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

## கோதுமை...

கடி ஏற்பட வாய்ப்பு உள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

உக்ரைனுடனான ஒப்பந்தத்தை மீறி கருங்கடல் வழியாக தானியங்களை கொண்டு செல்ல அனுமதி இல்லை என ரஷ்யா அறிவித்துள்ளது. (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
076 097 3127

மெகா பவர்
திகதி 27/07/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1536
A 26 05 26 31 79
45524

லக்கி 7
திகதி 27.07.2023
சீட்டிழுப்பு இலக்கம் 014
L7 இலக்கம் 3 5
வெற்றி இலக்கினம்: துலாம்
வெற்றி இலக்கங்கள்: 8 2 3 8 1 0

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3430
சீட்டிழுப்பு திகதி 27.07.2023
X 13 31 74 77
X 62817

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2023.07.27
சீட்டிழுப்பு இலக்கம் 497
மிதுனம் 02 04 20 26 மிதுனம்

மஹஜன சம்பத
திகதி 2023/07/27
சீட்டிழுப்பு இலக்கம் 5188
N 2 9 6 0 2 6

தன நிதானய
திகதி 2023/07/27
சீட்டிழுப்பு இலக்கம் 1218
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 101,988,549.60
ஆங்கில எழுத்து M
வெற்றி இலக்கங்கள் 02 09 11 26
விசேட எழுத்து M
Double Chance இலக்கம் 13976

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2162 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.07.27 தினம் வியாழக்கிழமை
22 33 40 66 S
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 57,672,900.40
"இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 16 17 57 67 G

சனிதா
திகதி 2023.07.27 வெற்றி வாரம் 4323 வர்ணம் சிவப்பு
10 30 53 67 V
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.52,403,136.00
"இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 11 23 42 69 Z

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3874 வர்ணம் கபிலம்
சீட்டிழுப்பு திகதி 2023.07.27 தினம் வியாழக்கிழமை
20 52 58 60 மேஷம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,000,000/-
"இரண்டாம் வரம்" 07 10 13 45

திகதி 27.07.2023 வெற்றி வாரம் 1338
E 32 03 11 15 55
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 421,567,654.20
"இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 17 20 28 32 F
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 614 திகதி 27-07-2023 வர்ணம் நீலம்
ஆங்கில எழுத்து E வெற்றி இலக்கங்கள் 12 14 18 விதி எண் 08
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ.22,240,552.00
DLB DEVELOPMENT LOTTERIES தொ. பே.: 0112 333 548/47 Web: www.dlb.lk

ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம்: 1988
வர்ணம்: இளம் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2023.07.27
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 60,568,758/-
17 34 46 66 K
"இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 35 37 59 67 I

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுநீரக...

செயலாளர் வைத்தியர் ஹரித்த அழுத்கே தெரிவித்தார்.

சிறுநீரக வைத்தியசாலைகளில் ஏற்பட்டுவரும் மருந்துப் பொருட்களுக்கான தட்டுப்பாடு காரணமாக சிறுநீரக சத்திர சிகிச்சை மேற்கொள்வதற்கு ஏற்பட்டிருக்கும் பாதிப்பு தொடர்பாக குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொழும்பு தேசிய சிறுநீரக வைத்தியசாலை அடங்கலாக நாடு பூராகவும் உள்ள சிறுநீரக வைத்திய சாலைகளில் மருந்து தட்டுப்பாடு நிலவி வருவதால் எதிர்வரும் தினங்களில் சிறுநீரக அறுவை சிகிச்சைகள் இடைநிறுத்தப்படும் அபாயம் உள்ளது.

குறிப்பாக, மருந்து தட்டுப்பாடு காரணமாக இந்த வைத்திய சாலைகளில் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைகளை இடைநிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ளும் முன்னர் நோயாளியை தயார்ப்படுத்துவதற்காக பெசிலிக்சிமெப் மற்றும் ஏ.டி.ஜி. என்ற இரண்டு மருந்துகள் வழங்கப்பட வேண்டும்.

தற்போது இந்த இரண்டு வகை மருந்துகளும் வைத்தியசாலைகளில் கைவசம் இல்லை. இந்த மருந்துகள் இல்லாவிட்டால் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ள முடியாது.

அத்துடன் அவசர தேவை கருதி தனியார் துறைகளில் இருந்து பெற்றுக்கொள்ளவும் இந்த மருந்து தற்போது அங்கும் இல்லை என்றே தெரிவிக்கப்படுகிறது. அதேநேரம் நோயாளிகள் இந்த மருந்தை அவர்கள் கொள்வனவு செய்வதாக இருந்தால் பெசிலிக்சிமெப் மருந்துக்கு சுமார் 3 இலட்சம் ரூபாய் வரை செலவாகும். ஏ.டி.ஜி. மருந்து ஒரு இலட்சம் ரூபாய் வரை செலவாகும்.

மேலும், மருந்து தட்டுப்பாடு காரணமாக இந்த வைத்தியசாலைகளில் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைக்காக திகதி நிர்ணயிக்கப்பட்டிருக்கும் நோயாளிகள் மற்றும் சிறுநீரகம் வழங்க இருப்பவர்கள் பாரிய பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

குறித்த மருந்து தொகையை உரிய முறையில் பாதுகாத்துக்கொண்டு செல்ல முடியாமல் போனதன் காரணமாக சுகாதார அதிகாரிகள் அவசர மருந்து கொள்வனவுக்கு செல்ல தயாராகி வருகின்றனர்.

மருந்துப் பொருட்கள் அவசர கொள்வனவின்போது இரண்டு இலட்சம் ரூபாய் மருந்தை 20 இலட்சம் அல்லது 30 இலட்சம் ரூபாவுக்கே கொள்வனவு செய்ய முடியுமாகிறது என்றார்.(ம-7)


## 2023 – ஆகஸ்ட் மாதத்திற்கான பட்டப்படிப்புகளின் புதிய பிரிவுகள் ஆரம்பம்

### MBA - Master of Business Administration

கால அளவு : 01 வருடம்

நுழைவுத் தகைமை : ஏதேனும் Bachelor Degree அல்லது முகாமைத்துவ துறையில் 05 வருடங்களுக்கு குறையாத அனுபவம்

BBA - Bachelor of Business Administration | B.A in English | B.Eng in Civil Engineering

கால அளவு : Final year Direct Entry

நுழைவுத் தகைமை : HND / Advanced Diploma அல்லது Diploma உடன் சம்பந்தப்பட்ட துறையில் 2 வருடங்களுக்கு மேற்பட்ட தொழில் அனுபவம்.

நேரடி மற்றும் online வகுப்புகள் (யூலை மாதத்திற்குள் பதிவு செய்பவர்களுக்கு விசேட கட்டண கழிவு உண்டு.)

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்ட கற்கைநெறிகள்
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்கும், மேற்கத்திய நாடுகளுக்கு இடம் பெயர்வதற்கான (migration) ஏற்ற வகையில் Wes அங்கீகாரம்.
- அரச பல்கலைக்கழக மற்றும் அரச உயர்கல்வி நிறுவன விரிவுவரையாளர்களால் விரிவுரைகள் நிகழ்த்தப்படுகிறது.

(16537/16540)

No. 925, K.K.S Road, தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல. 021 468 0964, 077 543 8086



## வேலைக்கு ஆட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல சைவ உணவகம் ஒன்றுக்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

- உணவு பரிமாறுபவர் (ஆண்/பெண்)
- யூஸ் தயாரிப்பவர் (ஆண்/பெண்)
- சிற்றுண்டி தயாரிப்பவர் (ஆண்/பெண்)
- தேநீர் தயாரிப்பவர் (ஆண்)
- துப்பரவு பணியாளர் (ஆண்/பெண்)

(16534)

076 166 1986



## உடனடி வேலை வாய்ப்பு

### நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்: கிளிநொச்சி, சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, திருகோணமலை, வல்வெட்டித்துறை, கோப்பாய், புத்தூர், பண்டத்தரிப்பு, சங்கானை, கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-

(C-6972)

0777-068-777
v2vacancies@gmail.com



## நன்றி நவிலலும் ஆத்ம சாந்தி வழிபாடும்

### ராஜராஜஸ்ரீ கு.நகுலேஸ்வரக்குருக்கள்

(27.05.1925 - 15.07.2023)

இடம் : நகுலேஸ்வரம் காலம் : 29.07.2023 சனிக்கிழமை



கடந்த 15.07.2023 சனிப் பிரதோஷத்தன்று சிவ சாயுஜ்ஜம் அடைந்த கீரிமலை நகுலேஸ்வர ஆதீனகர்த்தா ராஜராஜஸ்ரீ கு.நகுலேஸ்வரக்குருக்களின் மரணச் செய்தி கேட்டு நேரில் வந்தும் தொலைபேசி முகநூல் மின்னஞ்சல் ஊடாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் அன்னாரது இறுதி யாத்திரையில் பங்கு கொண்ட அனைவருக்கும் இன்று வரை எமக்கு சகல உதவிகளையும் செய்து கொண்டிருக்கும் அன்பு நெஞ்சங்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தினர் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வருகின்ற 29.07.2023 சனிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் நடைபெறும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் வழிபாடு பூரணத்துவமடைய தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தயவன்புடன் அழைக்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(C-6973)

நகுலேஸ்வரம்
077 636 6338/ 021 224 4436

இங்ஙனம் :
குடும்பத்தினர்



## காணி விற்பனைக்கு

யாழ் மாநகரசபை பகுதிக்குள் ஆறுகால் மடம் தில்லையவல் 2 ஆம் ஒழுங்கையில் 75 3/4 காணி 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.
அராலி வீதியூடாகவும் பாதை உண்டு.
பரப்பு ரூபாய் - 15 இலட்சம் முதல்

(16507)

077 352 5670
077 894 7293



## VILLAGE HOTEL JAFFNA EXPRESS

யாழ் - கொழும்பு பஸ் சேவை

AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி பஸ் சேவை
இனி வரும் காலங்களில்
VILLAGE HOTEL எனும் பெயரில்...



கட்டணம் - 2800/=

(16349)

T.P:077 544 8503



## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
- ONLINE APPLICATIONS
- VISA APPOINTMENTS
- PASSPORT APPLICATION
- POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.




Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும்

(C-6972)

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.

V2 TRAVELS

0777-068-777



## காணி விற்பனைக்கு

K.K.S Road முடவேம்படி சுன்னாகம் பகுதியில் வீடோடு கூடிய (சோளர் பூட்டிய நிலையில்) 2 1/4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

(16535)

077 938 4770



## வடஇந்தியா, காசி, சீரடி, திருப்பதி யாத்திரை

ஆரம்பம் : 15.09.2023 | நாட்கள் : 16 | யாத்திரிகர் : 15

**செல்லுமிடங்கள் சுருக்கமாக: டெல்லி:** நாராயணர் கோவில்மற்றைய இடங்கள் சுற்றிப்பார்த்தல், **ஆக்ரா,** தாஜ்மகால், **மாதுர,** கிருஸ்ணஜென்மபூமி பிரேம்மந்திர் தரிசித்தல், **அலகாபாத்,** கங்கா, ஜமுனா, சரஸ்வதி, திருவேணிசங்கமம் வேறு இடங்களும் காணலாம். கயா காலமாணவர்களுக்கும் சிரார்த்தம் செய்யும் இடம் அகால மரணமாணவர்களுக்கும் சேரத்து செய்யலாம். புத்தகயா, பல நாடுகள் கட்டிய புத்தாலயங்கள், **சீத்தாமடி,** சீதை தாயருடன் பூமிக்குள் புதையுண்ட இடம் **காசி** விஸ்வநாதர் உட்பட்ட 15 இடங்கள் காசியில் தரிசிக்கலாம் அத்துடன் **கங்காபூசையும்** காணலாம். 3 நாட்கள் காசியில் தங்கல் பின்பு **மும்பாய்,** சீரடிபாபா தரிசனம் சனிசிங்கனாப்பூர், சனிபகவான் கோவில், திரியம்பகேஸ்வரர் ஜோதி லிங்கதரிசனம் வேறு இடங்களும் காணலாம். பின்னர் **இராமேஸ்வரம்** தீர்த்தமாடி காசியாத்திரை நிறைவு பின்னர் நவபாஷணம், உத்திரகோசமங்கை சிவன் ஆலயம், திருப்புலானி தரிசித்து மதுரைமீனாட்சி சுந்தரேஸ்வரர் தரிசனம் முடித்து **திருப்பதி,** காளகஸ்திரி, அலமேலுமங்கா, திருத்தணி தரிசனம் முடித்து **சென்னை** வருகை 1 நாள் சென்னையில் சொப்பிங் முடித்து 01.10.2023 நாடுதிரும்பல்.

பெற்றுக்கொள்ளும் ரூபாவிற்கு எமது சேவை : 5 விமானப்பயணச்சீட்டு, மூன்றுவேளை மடப்பள்ளி ஆட்கள் சமைத்த சுத்தமான சைவ உணவு, 2 பேருக்கு கட்டில் மெத்தை, வெஸ்ரன் கொமட் குளியலறை இணைந்த அறைகள், காப்பி, ரீ, குடிநீர், (மினரல் வாட்டர்), யாத்திரிகை முழுவதும் AC வாகன வசதி வீட்டிலிருந்து விமான நிலையம் செல்லவும் திரும்ப வீட்டிற்கு வரவும் வாகன வசதி (யாழ் கொழும்பு யாழ்) வாகன வசதி செய்து தரப்படும். விபரங்களை கேட்டறிந்து பதிவு செய்யவும்.

குறைந்த கட்டணம்
நிறைவான தரிசனம்

"வந்தவரை கேளுங்கள் சென்றுவரலாம் வாருங்கள்"
" பூரண பாதுகாப்பான யாத்திரைப் பயணம்"

(16544)

கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன்: ராஜன்
Office:City Center Shopping Complex 3rd Floor, No.59,3/6, Sea Street, Colombo-11
Email: sriranganathan2601@gmail.com Facebook:sridevisriranganathan thuraiappa
Tel: 077 768 0102, 077 736 2[illegible]



## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் திருமதி

### சரஸ்வதி ஜெயம்

பிறப்பு 16.01.1954 | இறப்பு 29.07.2012



ஆண்டுகள் பத்து ஆனாலும்
ஆறவில்லை எம் துயர்
இவ்வுலகில் வாழ்ந்தாலும்
இதயம் மறக்க மறுக்கிறது
உற்றார் பலர் இருந்தாலும்
உறவுகள் சேர்ந்தாலும்
உங்கள் அன்பிற்கீடாகுமா?

(16546)

சிவன் வீதி,
அராலி[illegible]

கணவர், மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தினரால் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org